# ஆனையிறவு முகாம் மண்மூடை அரண் சரிவு

# போக்குவரத்து ஸ்தம்பிதம்

விலை ரூபா 1–25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 மார்கழி 10 ர. ஆகிர் 22 இதழ் 314

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 25 12-1986

## 600 ரயில் பயணிகள் தவிப்பு

வவனியா, புதன்

ஆனையிறவு தடைமுகாமில் பாதுகாப்பிற்காக அடுக்கப்பட்டிருந்த மண்மூடை அரண்கள் சரிந்து விழ்ந்ததையடுத்து இதனை சீர்செய்யும் வேலையில் ஈடுபட்டிருந்த இராணுவம் முகாமைத்தாண்டிச் செல்வதற்கு வாகனம் எதனையும் அனுமதிக்கவில்லை. இதனால் அங்கு சுமார் இரண்டு மணி நேரம் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது.

முகாமில் பாதுகாப்பிற்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த மண்மூடைகள் பல நேற்று அதிகாலை சரிந்து விழ்ந்தன. இவற்றைக் காலை எட்டுமணியளவில் சீர் செய்வதில் ஈடுபட்ட இராணுவம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற வாகனங்களையும் கொழும்பிலிருந்து யாழ் வந்த வாகனங்களையும் முகாமிற்கு சற்று அருகில் நிறுத்தி வைத்ததால் காலை எட்டு மணி முதல் பத்து மணிவரை சுமார் 150 வாகனங்கள் நூற்றுக்கணக்கான பிரயாணிகளுடன் காவல் நின்றன.

இதனையடுத்து மிகுந்த தாமதமாக முகாமிலிருந்து புறப்பட்டு வவனியா ரயில் நிலயம் சென்ற பிரயாணிகள் டஸ்கள் கொழும்பு ரயில் புறப்பட்ட பின்னரே ரயில் நிலயம் வந்தடைந்தன.

ரயிலை தவறவிட்ட சுமார் 600 பிரயாணிகள் நேற்றிரவு வவனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மன்றத்தில் தங்கியிருந்தனர். இவர்களில் சுமார் எழுபதுபேர் க. பொ. த.

(12-ம் பக்கம் பார்க்க)

## பௌத்த விகாரை பிள்ளையார் ஆலயமாகியது

(நுவரேலியா நிருபர்)

தலவாக்கொல்லையில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியில் சிங்கள மக்களால் பௌத்த விகாரை ஒன்று அமைக்க எடுக்கப்பட்ட முயற்சி தமிழ் மக்களின் ஆட்சேபத்தினால் கைவிடப்பட்டதுடன் அதே இடத்தில் பிள்ளையார் ஆலயமும் அமைக்கப்பட்டது.

தலவாக்கொல்லையிலிருந்து ஆறு மைல் தூரத்திலுள்ள பருயா டஜ ரிலுள்ள எல்ஜின் என்னும் பகுதியில் டஸ் நிலயமருகில் அரச மரம் ஒன்றின்கீழ் புத்தர் சிலையொன்று கடந்த 15-ம் திகதி முதல் சிங்கள மக்களால் வைக்கப்பட்டு தினமும் விளக்கு வைத்து வழிபாடும் செய்யப்பட்டு வந்தது

திடீரென நேற்று மூன்தினம் இந்த அரச மரமருகில் பௌத்த விகாரை ஒன்று அமைப்பதற்கென லொறிகளில் பல பொருட்களும் கொண்டுவரப்பட்டன

இதேவேளை தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் இப்பகுதியில் பௌத்த விகாரை அமைக்க எடுத்த முயற்சியை இப்பகுதி தமிழ் மக்கள் ஆட்சேபித்து புத்தர் சிலையை அகற்றியதுடன், லொறியில் வந்த பொருட்களையும் சேதமாக்கி புத்தர் சிலை இருந்த இடத்தில் இரவோடிரவாக பிள்ளையார் சிலையை வைதது கோயில் ஒன்றையும் அமைத்துள்ளனர்.

இந்தப் பிள்ளையார் கோயிலில் இப்போது பூஜை நடைபெற்று வருவதுடன் பெருந்திரளான தமிழர்களும் வழிபட்டுவருகின்றனர்.

கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இப்பகுதியில் நடந்த வன்செயலின்போது இங்குள்ள சிங்கள கடைகள் தமிழரால் சேதப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

### ● இந்திய இணை அமைச்சர் குழு

# புதிய யோசனைகளை ஏற்குமாறு

# போராளிகளை வலியுறுத்தும்

(சென்னை)

**தமிழர் பிரச்னை தீர்வுக்கான புதிய யோசனைகள் குறித்து ஈழப்போராளிகள் குழுக்களின் கருத்துக்களை அறியும் பொருட்டு இந்திய இணை அமைச்சர்களான திரு ப. சிதம்பரமும், திரு கே நட்வர்சிங்கும் இன்று ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு சென்னை வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

இதேவேளை இலங்கை முஸ்லிம் பிரமுகர்கள் குழுக்களின் யோசனைகளும் போராளிக் குழுக்களிடம் பிரஸ்தாபிக்கப்படடு அவர்களது கருத்துகளும் பெறப்படவுள்ளன

மேலும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சிங்களப் பிரிவுகளை நீக்கிவிட்டு கணிசமான அளவு தமிழர் வாழும் பிரதேசங்களை ஒன்றிணைத்து கிழக்கு மாகாண சபையை தனியாக அமைக்கலாம் என்ற இலங்கை அரசின் யோசனையை ஏற்று தொடர்ந்து பேச்சுக்களைத் தொடரவேண்டுமென்று ஈழப் போராளிகள் குழுக்களை இணை அமைச்சர்கள் வலியுறுத்தக் கேட்கவுள்ளதாகவும் அறியப்படுகிறது

1981ம் ஆண்டின் புள்ளிவிபரப்படி கிழக்கில் 42வீதம் தமிழரும் 32வீதம் முஸ்லிம்களும் 25வீதம் சிங்களவர்களும் இருந்தனர் என்றும் புதிய யோசனைப்படி உருவாக்கப்படும் கிழக்கு மாகாண சபையில் தமிழர் 48வீதமும், முஸ்லிம்கள் 37வீதமும் சிங்களவர் 14வீதமும் இருப்பார்கள் என்றும் அரசின் புதிய திட்டங்களில் உத்தேச கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது

மேற்படி விபரங்களும் போராளி குழுக்களிடம் இந்திய இணையமைச்சர்களினால் எடுத்து விளக்கப்படவுள்ளன.

இது இவ்வாறு இருக்க புதிய யோசனைகளை அடிப்படையாக வைத்தே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அறியப்படுகிறது

### இந்திய நடவடிக்கை குறித்து ஆலோசனை

இத்தவேளை இந்தியாவின் நடவடிக்கைகள் குறித்து

(12-ம் பக்கம் பார்க்க)

## துன்பத்திலிருந்து விடுபட்டு “அமைதியும் சமாதானமும் பெற யேசு வழிகாட்டுவார்”

— யாழ். ஆயர்

யாழ்ப்பாணம் வியா.

“அகில உலகமும் கிறிஸ்து பிறப்பு விழாவை மகிழ்ச்சியாகக் கொண்டாடும் இவ்வேளையில் எமது தமிழ்மக்கள் நத்தார் பண்டிகையைச் சிறப்புடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாட முடியாது பல இழப்புக்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்” என்று யாழ் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை விடுத்துள்ள நத்தார் செய்தியில் கவலை தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில்;



(12ம் பக்கம் பார்க்க)

## முகாமிலிருந்து விடுதலையானவர் நஞ்சருந்தி தற்கொலை

பண்டத்தரிப்பு. புதன்

இராணுவமுகாம் ஒன்றில் தடுத்துவைக்கப்பட்ட பின்பு விடுதலையான சுழிபுரம் வடக்கைச்சேர்ந்த 23 வயது இளைஞர் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தித்தற்கொலை செய்துகொண்டார்.

இவரது இறுதிச்சடங்கு சுழிபுரம் வடக்கிலுள்ள இவரது இல்லத்தில் நடைபெற்ற போது பெருந்தொகையான இளைஞர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள். (எ)

பிரயாண ஒழுங்கு

GLORIA TRAVELS

★ Norway ★ Germany

★ France ★ Canada

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன் எமது பிரயாண முகவர் உடன் அழைத்துச் செல்வார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் [BOND] விசா, ரிக்கற் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ,

மானிப்பாய்.

## துப்பாக்கிமுனையில் வாகனம் கடத்தல்

(நுவரெலியா நிருபர்)

ஹட்டன்சந்தியில் வாகனமொன்றை இடைமறித்த முகமூடி அணிந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கியைக் காட்டி சாரதியைப் பயமுறுத்தித் தாக்கிவிட்டு வாகனத்தை கடத்திச் சென்றுள்ளனர்.

இதேவேளை ஹட்டனில் நான்கு வாகனங்கடத்தல்கள் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## ஹெலியின் நடமாட்டம்

வல்வெட்டித்துறை, புதன்

நடுநிசியில் வல்லை இராணுவ முகாமில் வந்திறங்கிய ஹெலிகொப்டர் சத்தத்தி

(12-ம பக்கம் பார்க்க)

நத்தார் வாழ்த்துக்கள்

வாசகர்கள், விளம்பரதாரர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும் எமது நத்தார் வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

—நிர்வாகி

ஈழநாடு லிமிட்டெட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இரு வீடியோ டெக்குகள் E. M 370 நஷனல் (National) விற்பனைக்கு உண்டு. செ. இரவிக்குமார். முருகன் மின் தெல்லிப்பளை. (C 6448)

மெய்கண்டான் கலண்டர்கள், டயறிகள், பாடசாலை உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் கழிவு விலைக்குண்டு. அம்மா அச்சகம். புத்தகசாலை, உடுவில் ரோட், மருதனுமடம். C 6427

Bairaha Farms புறொயிலர் குஞ்சுகள் 23ந் திகதி செவ்வாய்க்கிழமையும் Hy - line பேட்டுக்குஞ்சுகள் 6-1-1987 செவ்வாய்க்கிழமையும் விநியோகிக்கப்படும். பதிவு செய்க: சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில்.

(C 6400)

நத்தார் புதுவருட வாழ்த்து அட்டைகள், திருமண அழைப்பிதழ்களும், சகல விலைகளிலுமான முத்திரை வகைகளும் பெற்றுக்கொள்ள அரஸ் ஜவுளி அகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001 [C6299]

கட்டுடையில், பிரதான வீதிக்கு அருகாமையில் 7 பரப்புக் காணியும், வீடும், கிணறு மின்சாரவசதியுடன் தென்னை, மாமரம், பலா மற்றும் பிரயோசனங்களுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: மு. திருநாவுக்கரசு, உபதபால் கந்தோருக்கு அருகாமையில், கட்டுடை, மானிப்பாய். C 6491

கணித/விஞ்ஞான உதவி ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி பொது அறிவும் பொது உளச்சார்பும் விலை 47/50. பூபாலசிங்கம், சிறீலங்கா புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாகப்பெற அஸ்ரன் இன்ஸ்ரியூட், 166/1 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். C6449

சகலவிதமான அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள் உள்ளூரில் தயாரிக்ப்பட்டு நியாயவிலையில் விற்பனை செய்யப்படுகின்றன மற்றைய நிறுவனங்களிலும் பார்க்க வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு. தயாரிப்பாளர்களும் விற்பனையாளர்களும் லக்ஷ்மி ஸ்ரோர்ஸ் 644, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (காப்புறுதிக் கூட்டுஸ்தாபனம் முன்). C 6434

T. S ஒலிப்பதிவு செய்யப்பட்ட கஸெட் - பண்டிகைக் காலத்து விலைகுறைப்பு ஒரு கஸெட் ரூ 29/- மாத்திரம். (I) கிறிஸ்மஸ் பாடல்கள் (II வெங்கடேசப் பெருமாள் சுப்ரபாதம், திருப்பள்ளியெழுச்சி திருப்பல்லாண்டு, திருமஞ்சனம் (நீராட்டல்), ஆழ்வார்கள் அருளியவை ஆண்டாள் பாசுரம் - Dr. சேலம் ஜெயலட்சுமி பாடியவை. ஒரே கஸெட்டில், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23631( C 6503)

தரமான நவீன வீட்டுத் தளபாடங்கள், T.V, டெக், Pyrex கிளாஸ் வகைகள், Singer Zig Zag தையல் மெஷின், Formica மேசை. Fans. சுசற் றேடியோக்கள், Electric Or-Fan, அமெரிக்கன் Pyrex Dinner Sets Tea Sets. Brass lamps, Fridge, கட்டில்மெத்தைகள், விருந்தை கதிரைகள், கண்ணாடி மேசைகள், Show case, பெரிய சிறிய அல்மாரிகள், Meat safe, மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி. யாழ்ப்பாணம், St Patrics வீதியருகில் C 6441

## விற்பனைக்கு

பழைய தட்டச்சு இயந்திரம், மீன்தொட்டி, சைக்கிள் (றலி Speaker Box ஆகியவை உடன் விற்பனைக்குண்டு. ஹரிஹரன் எண்ரபிறைஸ் 337, பலாலிறோட், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி யாழ்ப்பாணம். C 6476

தமிழ் ஆங்கில தட்டச்சு இயந்திரம் New Key Bord றெமிங்டன் 26'', 18'' ஆங்கில தட்டச்சு போட்டபிள் Brother, அன்டவூட் அபரிது. தொடர்பு, நிர்வாகி சங்கர், பிறிலியன் அக்கடமி, மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி. [C-6523]

மெய்கண்டான் லீலா கலண்டர்கள், டயறிகள் போதிய கையிருப்பிலுண்டு கிறிஸ்மஸ், புத்தாண்டு வாழ்த்துக்கள் மொத்த வியாபாரிகள் வியாபார ஸ்தாபனத்துக்கு அன்பளிப்பாக வழங்கக்கூடிய விலாசம் அடிக்கப்படாத கலண்டர்களுமுண்டு. மகமிலன் புத்தகசாலை, 03, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

(C 6365)

அராலி மேற்கு கொட்டைக்காட்டில் நாகம்மாள் கோவில் முன்பாக கிணறு, மாதென்னையுடன் பிரதான வீதியில் அமைந்துள்ள 7 பரப்பு காணி விற்பனைக்குண்டு தொடர்பு; நந்தகுமார் 32/3, விதானையார் வீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணம்

(C 6501)

## சேவை

135 M M. கலர் பிலிம் சுருள்கள் எதுவானாலும் Processing and Printing செய்பவர்களுக்கு போஸ்காட் சைஸ் ரூபா 4-75 Proce sing only 20/- விபரங்களுக்கு கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். A-3357

''போட்டோ ஸ்ரட்'', 'றேனியோ' பிரதிகளைத் தரமான காகிதத்தில் தெளிவான முறையில் பெற்றுக்கொள்ள: கிளீக் கட், 239 மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம், தொ. பே. இல: 22824. (C 3336)

உங்களிடமுள்ள பாவித்த வீட்டுப்பாவனைப் பொருட்களையும், தளபாடங்களையும் விற்கவோ, மாற்றுதல் செய்யவோ புதுப்பிக்கவோ தொடர்பு கொள்ளவும்: M தியாகராஜன், 326, பிரதான வீதி யாழ்ப்பாணம். St. Patrics வீதியருகில். C 6442

## தேவை

புத்தகம் கோர்த்துக் கட்டக்கூடிய அனுபவமுள்ள பைண்டர் தேவை. உடன் நேரில் வரவும், செட்டியார் அச்சகம் யாழ்ப்பாணம். (C 6521)

டீசல் மெக்கானிக்- உழவு இயந்திரம்- வேறிங்- இன் சேற்றர்பம் சேவிஸ்- லேத் வேலை- மெக்கானிக்- எலக்ரிக் வெல்டிங்- கேஸ் வெல்டிங், கம்மாலை வேலை தெரிந்தோர் விண்ணப்பிக்கவும். புதுவாழ்வு நிலையம் கூளாவடி, ஆனைக்கோட்டை. C 6509)

## மணப்பந்தல்

இந்து உயர்குல வேளாளக் குடும்பத்தை சேர்ந்த 23 வயது மூல நட்சத்திரம் செவ்வாய் தோஷமற்ற தமிழ், ஆங்கிலம், சிங்களம் கற்ற பெண்மகளுக்கு அதே குடும்பத்தைச் சேர்ந்த மணமகனைப் பெற்றோர் தேடுகின்றார்கள் சீதனமாக வீடு, நகை, ரொக்கம் கொடுக்கப்படும். மணமகனின் முழு விபரங்கள் தேவை விளம்பர இலக்கம்:- C-6519 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C-6519

## வைத்தியம்

மாறுது நாட்பட்ட நோய்களுக்கு விசேட சிகிச்சை அளிக்கப்படும். ஜெயந்தி கிளினிக். 218/5, பலாலி வீதி, கந்தர்மடம். C-6256

## வகுப்புக்கள்

Spoken English புதிய பிரிவுகள் திங்கள், புதன், வெள்ளி காலை 6மணி—7மணி 9மணி 10மணி ஆரம்பம்: 29-12 86 S B Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். C-6483

ஆனைக்கோட்டை கூளாவடி புதுவாழ்வு நிலையத்தாரால் 1987 தை மாதம் முதல் நடத்தப்பட இருக்கும் பாலர் பள்ளிக்கு பிள்ளைகளைச் சேர்க்க விரும்புவோர் நிர்வாகத்தோடு தொடர்பு கொள்ளவும். C 6443

Radio, T V. வயறிங், வெல்டிங், பிளம்பிங், மோட்டோர் மெக்கானிசம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. சான்றிதழ் பெறுமதியானது தொடர்பு:- Vispa Engineering Hall, 328 நாவலர் வீதி யாழ்ப்பாணம். (C-6502)

Quantity Surveying Part-I (City and Guild - London) வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. Part II ஆனவகுப்பு 14-12-86 அன்று ஆரம்பமாகிவிட்டது Diploma in Draughtsmanship and Diploma in Quantity Surveying-1987 New Batch (English medium) ஜனவரி முதல வாரத்தில் ஆரம்பமாகவுள்ளன 31-12-86க்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும். அதிபர். உயர்கலைக் கல்லூரி-ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். C 6289

## பயிற்சி

தொழில் பயிற்சி டிப்ளோமா வகுப்புக்கள் ஆரம்பம் 29-12-86 Telex Operators International இருபாலாரும் றேடியோ, ரெலிவிசன், எலக்ற்றிக்கல்வயறிங். சான்றிதழ்கள் வழங்கப்படும். Electros-Thirunelvely Junction. C 6359

## முக்கிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் சோலைவரி 4ம் கந்தாயம் - 1986

1986ம் ஆண்டு 4ம் கந்தாயத்திற்கான சோலைவரிப்பணம் 31-12-86ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக மாநகராட்சி மன்றப் பணியகத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் விபரங்களின்படி வெளியாத்துப் பணம் அறவிடப்படும்.

வெற்றுக் காணிகள்
குடியிருப்புக் காணிகள் - 15%
இவையல்லாத காணிகள் - 20%

காசோலைகள், காசுக் கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள், ''யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளரின்'' சார்பில் அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டிய அனுப்பப்படல் வேண்டும். அப்படியாக அனுப்பப்படும் போது வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரி மதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டாரத்தின் இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப்பணத்தை அனுப்புப்படி வேண்டப்படுகின்றனர்.

சி. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
(C 3378)

## கல்வி

தமிழ் மூலம் விரிவான இலக்கணத்துடன் இலகுவில் ஆங்கிலம் பேச-எழுத Spoken English and Granmar Part I and II By N. M C V. Thasan விலை 23-50 ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம் C-6511

புதிய பாடத் திட்டப்படி 5ம் வகுப்பு, (6ம் ஆண்டு) மாணவர்கள் கல்லூரிகளில் சேர ஜனவரி கடைசி வாரம் நடைபெறும் பிரவேசப் பரீட்சைக்கு துரித வகுப்பு 1986-12-26 வெள்ளிக்கிழமை மு ப. பத்து மணிக்கு ஆரம்பமாகிறது. 35 வருட ஆசிரிய அனுபவம் கொண்டவரால் கற்பிக்கப்படும் நேரில் சமுகம் தரவும். அன்பு மாலைப் பாடசாலை, 42, பிரப்பங்குள ஒழுங்கை, யாழ்ப்பாணம், C-6505

### முதலாவது பிறந்ததின வாழ்த்து



வெ. செந்தூரன்

யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த வெற்றிவேலுப்பிள்ளை சத்திடவதி தம்பதிகளின் செல்வப்புதல்வன் செந்தூரன் இன்று 25-12-1986 தனது முதலாவது பிறந்த தினத்தை மேற்கு ஜெர்மனியில் கொண்டாடுகிறார். இவரை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பம்மா, பூட்டிமார், மாமார், மாமிமார், சித்திமார், திருவரங்கன் பச்சான், மற்றும் உற்றார், உறவினர்கள் வாழ்த்துகின்றனர் 17/2, ஐயனார் கோவிலடி, வண்ணார் பண்ணை. [C 6518]

## விற்பனைக்கு

சாவகவிற்பனை 27 28-12-86 திகதிகளில் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் பொருட்காட்சியில் மில்க்வைற் விற்பனைக் காட்சிச் சாலையில் ரூ.15/-க்கு மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கும் அன்பர்களுக்கு அழகிய பொலிதீன் பைக்குப், புதுவருஷக் கலண்டரும், கீரை விதைகளும், மரக்கன்றும் மற்றும் மில்க்வைற் வெளியீடுகளும் அன்பளிப்பாக வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து பெறுமதி வாய்ந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம்.

(C 3390)

### முதலாண்டு நினைவஞ்சலி



திருமதி
சபாரத்தினம்
நாகரத்தினம்
மண்ணகத் தோற்றம்
2 -10- 1922
விண்ணக ஏற்றம்
2 1-1986
திதி: 23-12-1986

அன்பே நீ தெய்வமாகி ஆண்டொன்றாலும் எங்களுக்கு இன்று போல் இருக்குதம்மா எமது இதயத்தின் நினைவுகளானாய், உயிராய் உணர்வாய்க் கலந்தாய், தேனாய் இனித்தாய், தெய்வமானாய் எமது அன்பின் திருவிளக்கே! பாசத்தின் சுடர் விளக்கே உமது ஆத்மா சாந்தியடைய மனதாரப் பிரார்த்திக்கும் உமது அன்புக்கணவர், மக்கள், மருமக்கள், சகோதரரும், மைத்துனிமார்கள், பேரன்மார், பேத்திமார் உற்றார், உறவினர்கள்.

க. சபாரெத்தினம்,
கவிதாஸ்டோர்,
[C 3394) நல்லூர்.

எம் மண்ணில் உள்ள எம் மக்களுக்கு
எமது உளம் கனிந்த கிறிஸ்தோதய
வாழ்த்துக்கள் சமர்ப்பணம்

## ''வைற் ஹவுஸ்''

## ''WHITE HOUSE''

இன்றுநேற்றல்ல நாம் அந்திய கால சேவையை வழங்குவதில் பரம்பரை விற்பன்னர்கள். காரணம் எம்மக்களுக்கு அது உள்ளங்கை நெல்லிக்கனி.

உங்கள் அந்தியகால சேவையை நாங்கள் முழுமையாகமுடித்துவைக்கின்றோம் ஆம், எமது அனுபவம் வாய்ந்த தொழில்வல்லுனர்களால் பெட்டிகள் மலர் வளையங்கள், எம்பாமிங் மற்றும் வாகனங்கள் எல்லாவற்றையும் 24 மணிநேரமும் உங்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கின்றார்கள். உங்கள் அந்திய காலத் தேவை எதுவானாலும் நீங்கள் அங்கு இங்கு என்று அலையாமல் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள் நாம் அவற்றை உங்களுக்கு நிறைவேற்றித் தருவோம்.

''வைற் ஹவுஸ்''

உங்கள் கடைசிப் பயணத்தை நாங்கள் தொடக்கி வைக்கிறோம்.

''WHITE HOUSE''

191, பிரதான வீதி
[சின்னக்கடைச் சந்தி]
யாழ்ப்பாணம்.
[A-3385]

தொலைபேசி: 23602

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக உரிமைகள் வேண்டி சீன மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!

பீக்கிங், டிச 24. சீனுவில் அதிகளவு ஜனநாயக உரிமைகளையும், பல கட்சி ஆட்சியமைப்பையும் கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். ஷங்ஹாய் நகரில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டங்கள், பீக்கிங் உட்பட சீனுவில் பல முக்கிய நகரங்களுக்குப் பரவிவருகிறது.

சீனுவின் தலைநகரான பீக்கிங்கில் நேற்று சின்ஹுவா பல்கலைக்கழக மாணவர்கள் பெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

சீனுவில் அதிகளவில் ஜனநாயக உரிமைகள் வழங்கப்படவேண்டுமெனவும், பல கட்சி ஆட்சி முறை கொண்டுவர வேண்டுமெனவும், தற்போதைய சீன அரசாங்கத்தின் ஊழல்கள் அம்பலமாக்கப்படவேண்டுமெனவும். இம்மாணவர்கள் கோஷமிட்டனர்.

ஆயிரக்கணக்கான மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தை நடத்தி இவர்கள் பீக்கிங்கில் உள்ள போது இரு பல்கலைக்கழகங்கள் பீக்கிங் நகரின் மத்திக்கும் ... வரை நடந்து சென்றும் இம் மாணவ ஆர்ப்பாட்டக்காரர்கள் நகர்ந்தனர். ஆனால் போலிஸார் தலையிட்டதை அடுத்து அவர்கள் பின்வாங்கினர்.

இருந்த போதிலும், தாம் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவித்த பின்னரே பின்வாங்கியதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

சீனுவில் பல சீர்திருத்த நடவடிக்கைகள் ஆரம்பமாகியதையடுத்தும், அரசியல், பொருளாதார ரீதியாக சமூக மாற்றங்கள் கொண்டுவரப்பட்டதையடுத்தும் சீனுவில் இது போன்ற ஜனநாயகரீதியான போராட்டங்கள் அடிக்கடி இடம்பெற்றுவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகச் செய்திகள்

## எரிபொருள் மீள நிரப்பாது அமெரிக்க விமானம் உலகவலம் வந்து சாதனை!

கலிபோர்ணியா, டிச 24.

ஒரு தடவைக்கு மேல் மீள எரிபொருள் நிரப்பாது 'வொயஜர்' என்ற அமெரிக்க விமானம் ஒன்று வெற்றிகரமாக உலகவலமொன்றை நிறைவு செய்துள்ளது.

40, 225 கிலோ மீட்டர்கள் தூரத்தை இந்த உலக வலத்தின்போது 9 தினங்களில் அவ் விமானம நிறைவு செய்தது.

கலிபோர்ணியாவின் 'எட்வேர்ட்' விமானத்தளத்தில் நேற்று இவ்விமானம் பாதுகாப்பாக தரை இறங்கியது.

ஒரு தடவைக்கு மேல் மீளவும் எரிபொருள் நிரப்பாது நீண்ட பயணத்தை மேற்கொண்ட முதலாவது விமானம் இதுவென்று தெரிவிக்கப்பட்டது

பத்துத்தினங்களிலேயே மேற்குறிப்பிட்ட தூரத்தை நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டது ஆனுல் ஒரு தினம் முன்பதாக 9 வது நாளில் 'வொயஜர்' விமானம் உலகவலத்தை முடித்துக் கொண்டது.

## சங்காபிஷேகமும் சுமங்கலிபூஜையும்

ஆனைக்கோட்டை, புதன்

ஆனைக்கோட்டை உயரப்புலம் வீதி அருள்மிகு ஸ்ரீ ஆலடி ஞான வைரவ சுவாமி ஆலய மண்டலாபிஷேக பூர்த்தியை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை பகல் 108 சங்காபிஷேகமும். மாலை 5 மணிக்கு "சுமங்கலி பூஜையும்" (தீப பூஜை) வைரவப் பெருமான் திருஊஞ்சல் ஆடி அருளுதலும், தண்டிகைத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.


RADIO, T. V. & Electronic Engineering Course

7 Months - Weekends

G. C. E. (O/L) பரீட்சை எழுதியவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

★ RADIO
★ T V
★ VIDEO TAPE RECORDER
★ AUDIO TAPE RECORDER
★ STEREO HI FI AMPILIFIERS
★ RECORD PLAYERS

மற்றும் இலத்திரனியற் கருவிகளை எமது நவீன ஆய்வுகூடத்தில் முதுபார்க்கும் நுட்பத்தைப் பயின்று கொள்ளலாம்.

தொழிற்சாலைகளில் இலத்திரனியற் கருவிக் கட்டுப்பாட்டு [Control System] முறையையும், கம்பியூட்டர், கல்குலேட்டர், Electronic Organ, Clocks Radio Transmitters, Electronic Typewriters போன்றவற்றின் தத்துவங்களை எமது பாடத்திட்டம் உள்ளடக்கியமையினுல் வேலை வாய்ப்புகளை மிக இலகுவில் பெற்றுக்கொள்ளலாம்.

விரிவுரைகள் லண்டன் தகைமையும் அனுபவமும் வாய்ந்த விரிவுரையாளரால் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடத்தப்படும். அச்சிட்ட பாடக்குறிப்புகளும் இவ்விரு மொழிகளிலும் வழங்கப்படும்.

Fees - ரூபா 250/- வீதம் 6 மாதங்களுக்கு

வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில் ஆரம்பம் : 27-12-86 - 10 மணி.

I. C. M. A, I. D. P. M, A. A T, I, A. B. வகுப்புக்கள் சென்ற வாரம் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மேலும் விபரங்களுக்கு:

CANTABIA INSTITUTE,
21, Main Street,
JAFFNA.
Phone : 24201. [A 3254]


## துருக்கியில் 264 தொழிற்சங்க வாதிகளுக்கு நீண்டகாலச் சிறைத்தண்டனை!

அங்காரா, டிச 24.

துருக்கியில் 264 தொழிற்சங்கவாதிகளுக்கு நீண்டகாலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

துருக்கியின் இராணுவ நீதிமன்றம், இத் தண்டனையை வழங்கியது கம்யூனிஸ்ட் பிரச்சாரம், வகுப்புவாதம் ஆகியவற்றை உண்டுபண்ணியதாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இவ் விசாரணைகளில் சுமார் 15 ஆயிரம் பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

துருக்கியில் இராணுவ நீதிமன்றம் ஒரே தடவையில் தது இதுவே முதல்தடவை பெருமளவு பேரை தண்டித் என்று தெரிவிக்கப்பட்டது.

## மின்சாரத் தடை

உரும்பிராய் புதன்

உரும்பிராய்ப் பகுதிகளில் இரவு நேரத்தில் மின்சாரம் தடைப்படுவதனுல் மாணவர் கல்வியும் போக்குவரத்தும் பெரிதும் பாதிக்கப்படுகிறது,

ஒழுங்கைகள் திருத்தப்படாமல் சீரற்று இருக்கும் இக் காலத்தில் மழை காரணமாக நீர் குண்டு குழிகளில் தேங்கியுள்ளதுடன் மின்சாரமும் தடைப்படுவதால் மக்கள் போக்குவரத்துக்கும் தடை ஏற்பட்டுள்ளது. (ரா)


முகவர் நிலையங்களுக்கான அங்கீகாரத்துடன் குடாநாட்டில் தொடர்ந்தும் சேவையாற்றுகிறேம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேம்;

பிரயாண ஒழுங்குகள்

✱டென்மார்க் ✱கனடா
✱லண்டன் (U. K.) ★ஜெர்மனி

ஆகியநாடுகளுக்கு எமது முகவர் உடனுக்குடன் உங்களை அழைத்துச் செல்வார்;

சவூதி, குவைத்

கிளீனேர்ஸ், Gardeners, Labourers, Drivers இருப்பிடமும் சாப்பாட்டு வசதிகளுடனும் வருமான ஒழுங்கு கூடிய கெதியில் செய்துதரப்படும்.

சிங்கப்பூர், குவைத்

பெண்களுக்கு வருமான ஒழுங்குகள் இருப்பிடமும் சாப்பாட்டு வசதியுடன் துரித கதியில் செய்து தரப்படும்.

பாஸ்போட். பொண்ட் (BOND), விசா, ரிக்கற் முதலியன துரித கதியில் செய்து தரப்படும்.

GROUP ATLANTIC TRAVELS

இல. 163, ஆஸ்பத்திரி வீதி; யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோவில் முன்பாக [A 3223)

அனைவருக்கும் இனிய நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும் செல்வம்பெருகட்டும்

வீடியோ விஹொன்ஸ்

சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்திட நாடுங்கள்

353C, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
வெலிங்டன் சந்திக்கு அருகாமை

VIDEO Vihons

(A 3259


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

குத்தும் முள்ளில் கொடிக்கால் திராட்சையா?
கொடுவெங் காட்டில் அத்திப் பழமா?
நன்மர மாயின் நற்கனி கொடுக்கும்
தியன வாயின் தியன வளர்க்கும்.

—இயேசு காவியம்.

# நமது நோக்கு

## உலகம் ஒரு குடும்பம்

நத்தார் தினம் அகில உலகுக்கும் சமாதானத்தை நினைவுறுத்தும் தினம்.

பிணக்குறும் இன்றைய உலகு போரைச் சற்றே நிறுத்தி, மனச்சான்றைத் தட்டியெழுப்பி மீளாய்வு செய்யவேண்டிய தினம்.

"புளிப்பு மாவே புதுப் புது ரொட்டிகள் செய்வதற்கேற்ற சிறந்த சாதனம்" அதனை இயேசு அமைத்தார் உவமையில்:-

"வானக அரசும்
புளித்த மாவாகும்
அதனைச் சிறிதே
அங்கையில் எடுத்துப்
பலபல மாவில்
பழுதறக் கலந்தால்
எல்லா மாவும்
நற்பலன் தருமே
வீட்டுப் பெண்கள்
விளக்கம் அறிவரே!"

என்று பாடுகிறார் கவியரசு கண்ணதாசன். வீட்டுப் பெண்களில் சமாதானம் தங்கியிருப்பதை இன்று நினைவு கூருவோம்.

உலகனைத்தையும் ஒரு குடும்பமாகக் கருதி, விண்ணக அரசை மண்ணில்நிறுவ வந்த இயேசுநாதர் அதற்காகச் செய்த உயிர்த் தியாகமே இன்றும் இந்த உலகம் உயிர் வாழ்வதற்கு உதவியது இந்த எண்ணம் எந்தக் கிறிஸ்தவரும் நினைவில் கொள்ளும் நாள் இது.

கிறிஸ்தவர் மட்டுமல்ல அகில உலகமும் இதனைக் கொண்டாடுவதற்குச் சர்வதேச அரசியலே காரணமென்று கொள்வது சாதாரண சிந்தையாய்விட்டது.

கிறிஸ்துவின் நற்செய்தியை உலகெலாம் எடுத்துச்சென்ற மிஷனரிமாரின் அரசியல் ஆதிக்கம் அருகியபோதும் அப்பெருமானின் போதனைகளும் சாதனைகளும் உலகில் வாழும் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்திருக்கிறது வெளிப்படை.

எனவே, இன்றொரு நாளாவது சண்டையையும், ஒருவரை ஒருவர் கொல்லும் முயற்சியையும் நிறுத்தி வைக்க எங்கள் நாட்டின் போராளிகள் உடன்பட்டிருப்பது பெரிய உண்மையின் சிறிய உதாரணமாகும்.

உலகம் ஒரு குடும்பம் என்ற பேருண்மை என்று எல்லா நாடுகளும் மக்களும் உணரவேண்டிய நிர்ப்பந்தம் நாளுக்கு நாள் கிட்டி வருகிறது.

மருத்துவத்தில் ஒரு பெருங் கொள்கை, நோய் அபாய நிலையை அடைந்தே குணமாகுமென்பது. நோயாளி தப்புவாரா மடிவாரா என்ற நுண்ணிய எல்லையை மருத்துவ நிபுணர் அறிவார். இன்றைய உலகு அழிவிலிருந்து தப்பிவிடுமென்ற நம்பிக்கை மின்மினி போல் ஒளிவிடுகிறது.

இன்று எழுத்தும் பேச்சும் அளவுகடந்த நிலையில் இக் குடும்ப வாழ்க்கைக்குக் குந்தகம் விளைவிக்கின்றன. போரைத் தூண்டும் பேச்சும் எழுத்தும் மலிந்து வருகின்றன.

அதற்கு மேலான மோசநிலை என்னவென்றால் எழுத்தும் பேச்சும் ஒருவாறமைய செயல் அதற்கு மாறுபட்டிருப்பது.

இயேசுவின் நற்செய்தி பரவிய காலம் சொற்பொழிவுகள் பரவாத பழங்காலம்; செய்தித் தாள்கள் கட்டுரைகள் உலகெங்கிலும் பரவமுடியாத காலம். இது போன்ற பழங்காலத்தில் நோக்கங்களைப் பரப்புவதற்கு ஒரே ஒருவழி தான் இருந்தது. அதுதான் செயல்-தொண்டு; செயலுக்கு மக்களைக் கவரும் அளவற்ற ஆற்றல் இருந்தது.

இத்தகைய ஆற்றல் பெற்ற பெரியோர் பேச்சைக் கேட்க இன்றும் எந்த மூலைமுடுக்கிலும் மக்கள் நூறாயிரக்கணக்காகத் திரள்கிறார்கள். எனவே எழுத்துக்கும் பேச்சுக்கும் உயிர் செயல் என்பது இன்றைய தினம் மனதில் பதிவது மிகப் பொருத்தமானது. செயலே தன் உயிர்வாழ்க்கைக்கு அடிப்படை என்று எண்ணவேண்டும். இதுவே உண்மைச் சமயநெறி.

இன்று சமயத்தினால், மொழியால், இனத்தால் வேறுபட்டோர் இத்தகைய உயர்நோக்கை மறந்து, வேறுபாடுகளை விருத்தி செய்கின்றனர். அவற்றை அரசியலில் புகுத்திவிடுவதால் தீராநோய்கள் உலகை வருத்தி வருகின்றன.

"எனக்கோ என்னுடைய சமூகத்திற்கோ நாட்டுக்கோ மட்டும் சிறப்பாகக் கடவுள் ஒன்றும் அருளவில்லை"

உலக அரங்கில் நாம் இன்று காணும் வஞ்சனை எங்கள் நாட்டைத் தப்பவிடவில்லை.

தன்னலமற்ற தொண்டைப் பிறருக்காகச் செய்வதே மனிதனுடைய கடமை. நல்ல பெருஞ் சமயங்களைக் கொண்ட எங்கள் நாட்டில் ஒவ்வொன்றும் உரைக்கும் பொது சமயநெறி இதுவே!

தொண்டு செய்தால் பிறருக்கு நன்மை உண்டாகும் என்று நினைப்பது தவறு. அது தனக்குத் தானே செய்யும் நன்மை ஆகும். பிறருக்குத் தொண்டு செய்யும் ஒவ்வொருவருக்கும் கடவுளின் அருள் உண்டு. நானொரு சாதாரண தொழிலாளி. மக்கள் தொண்டன் என்ற எண்ணம் ஜனநாயக அமைப்பில் உதயமானால் உலக அமைதி நிச்சயம் கிட்டும்.

உலக நாடுகள் அனைத்தும் ஒரு ஆட்சியில் அமைவதே இன்றைய உலகுக்குப் பாதுகாப்பு என்று உறுதி கூறினர் 97 வது வயதில் மறைந்த உலகின் பெருந் தத்துவமேதை பேறறிரான்ட ரசல். நாத்திகர் போல் அவர் நடித்த போதும் உலக அமைதிக்கு போரின் ஒழிவுக்கு அவர் செய்த முயற்சி எவரும் எடுக்கவில்லையென்று கூறுவது மிகையாகாது.

உள்ளங்களில் சமாதானம் உதயமாவதே இன்றைய தினத்தின் நற்செய்தி. அந்த நம்பிக்கையில் ... இன்னும் இடமுண்டு.

---

உலக அரசியல் — அவதானி

## அடுத்தமாதம் குவைத்தில் கூடும் இஸ்லாமியஉச்சிமாநாட்டால் என்னகும்?

## இந்தயாவின் கர்நாடக மாநிலம் நடத்திய 'சோகநாடகம்'

## பத்திரிகையாளருக்கு அரிய பாடம்!

## அந்நாட்டின் அரசமொழிப்பிரச்னை மறுதலித்தால்

## தமிழ்நாட்டைச் சிர்குலைக்கும்!

## பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திருமதி அக்கினோவிற்கு உண்டான

## கடும் பரீட்சையில் தேறுவார் என்ற திடமுண்டு

## அமெரிக் அதிபர் ரீகனின் சர்வதேச சாயம் கழன்றிருப்பதால்

## உலக அரங்கில் ஐரோப்பாவின் குரல் எழுப்ப வல்லவர் யார்?,

### மத்திய கிழக்கு

ஷேக்ஸ்பியரின் 'மாக்பெத்' நாடகத்தில் வரும் மந்திரவாதிகளின் அண்டாமாதிரிக் கொதிப்புறும் மத்தியகிழக்கில் அமைதிக்கு எடுத்துவரும் முயற்சிகள் பல. எதுவும் வெற்றியடையுமென்று நம்ப இதுவரையும் சாத்தியக்கூறு எதுவுமில்லை.

வருகிற மாதம் குவைத்தில் கூடும் இஸ்லாமிய உச்சி மாநாட்டில் எகிப்திய ஜனாதிபதி முபாரக் கலந்துகொள்வாரெனக் கூறப்படுகிறது. இஸ்ரேலுடன் 'காம்ப்டேவிட்' ஒப்பந்தம் செய்ததும், எகிப்தின் செல்வாக்கு அரபு நாடுகள் மத்தியில், பொதுவாக இஸ்லாமிய சமுதாயத்தில் குன்றி வந்தது.

இன்று ஈராக்கிற்கு ஆதரவளித்துவரும் எகிப்து, சவூதி அரேபியா போன்ற பலம் வாய்ந்த நாடுகளைத் திருப்திப்படுத்திவருகிறது. அரபு நாடுகள் அனைத்தும் ஈரானுக்கு எதிராக அணிதிரள வேண்டும் என்று ஜனாதிபதி முபாரக் குரலெழுப்புகிறார். இது நடவாத காரியம். ஈரானின் நண்பர் சிரியாவும் இதனை எதிர்க்கும்.

எகிப்தை மீண்டும் அரபு நாடுகள் ஒன்றியத்தில் சேர்ப்பது பிரச்சினையாக இருந்தாலும் இஸ்லாமிய உச்சிமாநாட்டின் பொறுப்பு மிகப் பாரதூரமானது. ஆறு வருடங்களுக்கு மேற் தொடரும் ஈரான்-ஈராக் யுத்தம் இன்று கோரநிலைக்கு வந்துவிட்டது. சகோதரர்கள் ஒருவரை ஒருவர் கொலைசெய்யும் கொடிய நாடகத்தை எவ்வகையிலும் நிறுத்தவேண்டும்.

இதற்கு அரபுநாடுகளின் வஞ்சனைப் போக்கு உதவாது. மத்தியஸ்தப் பணியில் ஈடுபடுவோர் பக்கஞ் சாராதிருக்க வேண்டும். அரபுநாடுகள் ஈரானின் இன்றைய இஸ்லாமியப் புரட்சி ஆட்சியை வெறுக்கின்றன. ஈராக் பக்கம் நின்று ஈரானைத் தனிக்கப் பிடிக்க முயல்கின்றன. சவூதி அரேபியா போன்ற முக்கிய பாத்திரங்கள் சற்றே நெகிழ்ந்து வருவதால் மாற்றம் ஏற்படலாம். வளைகுடா யுத்தம் லெபனான் போருக்கும் பாலஸ்தீனியப் பிரச்னைக்கும் தீர்வுகாண முடியாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. சிரியா உருவாக்கும் சமாதானத் திட்டம் லெபனானில் தலைதூக்க முடியாத அளவில் பாலஸ்தீனியர் முகாம்கள் முஸ்லிம் தீவிரவாதிகளால் தாக்கப்படுகின்றன. இந்தப் பரபரப்பான நிலையில் இஸ்ரேல் தலையிடுவது 'உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன்' என்ற வாதத்திற்கு உதாரணமாகும்.

### கர்நாடக மாநிலத்தின் சோக நாடகம்

கர்நாடக மாநிலத்தின் பிரபல தினசரி 'Deccan Herald' கொளுத்திவிட்ட நெருப்பில் இருபது பேருக்குமேல் மாண்டனர். இனக் கலகம் அடக்க முடியாத அளவுக்குப் பரவியது. இஸ்லாமிய சமுதாயத்தைப் புண்படுத்தும் கட்டுரை ஒன்று, நெருப்பைக் கக்கும் தலையங்கம், கடைசிப் பந்தி இந்தக் குரோதத்தைத் தட்டி எழுப்பும் தன்மையில்-ஒரு புனைகதை வடிவில் பிரசுரிக்கப்பட்டது.

இது மிகத் தவறெனதென்பதைப் பத்திரிகாசிரியர் ஒப்புக்கொண்டு எவ்வித நிபந்தனையுமற்ற மன்னிப்புக் கோரிய போதும், வீறுகொண்டெழுந்த இஸ்லாமிய கூட்டத்தினரை அடக்கவே முடியவில்லை.

இது ஒரு புனைகதைதான் என்று தட்டிக்கழிக்கும் பேர்வளிகள் இத்தகைய பொறுப்பற்ற பிரசுரத்தின் தீமையைப் புரியாதவர்களே. மாநில முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே மிகுந்த அரசியல் சாமர்த்தியத்துடன் இதனை அணுகியிருக்கிறார். 'நடுநிலைமைகொண்ட' ஒரு உயர்தர குழுவை நியமித்து உண்மை வெளியானதும் தக்க தண்டனையளிக்கத் திட்டமிட்டுள்ளார்.

அமைதி உலாவிய மாநிலத்தில் இத்தகைய சம்பவம் நடைபெற்றது ஆச்சரியமான போதும் இந்தியா பூராகவே வகுப்புவாதம் என்ற கொடிய நோய் வேரோடு களையப்படவில்லை. இந்தச் சூழ்நிலையின் ஆழமான அர்த்தம் புரியாதவர்கள் இவ்வித அபாயகரமான செயல்களில் ஈடுபடுவது, மொழி மத பேதங்களைக் கொண்ட அரசியல் நோக்கு நாட்டில் உயிர்த் துடிப்புடன் இருப்பதை அறியாதவர்களே.

ஒரு சிலரின் சில்லறைச் சேட்டைக்கு ஒரு சமுதாயத்தைப் பணயம் வைப்பதா என்று அங்கு மட்டுமல்ல இலங்கை இனக்கலவரங்களிலும் சொல்லப்படுவது, அரசியல் சமுதாய அறிவீனத்தைப் பறைசாற்றுகிறது.

அடிப்படையில், பகைமையும் எதிர்ப்பும் உண்டாக்க வல்ல, மொழி, இனப்பிரச்னைகள் செவ்வனே தீர்க்கப்பட்ட போதும், அவற்றிற்குக்கிடைக்கும் சவால் மிகச் சிறிய சம்பவமானாலும், ஒரு நெருப்புக்குச்சி முழு வீட்டையும் எரித்ததுபோலாகும்.

### பாரதத்தில் மறுதலித்திருக்கும் மொழித் தீவிரவாதம்

முக்கோணத் தீவிரவாதம் இன்று இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்குச் சவால் விடுகின்றது. பஞ்சாபில் பயங்கரவாதம், கர்நாடகத்தில் வகுப்புவாதம், தமிழ்நாட்டில் மொழிவாதம். 'இமயம் தொடக்கம் குமரி வரைக்கும்' ஒன்றுபட்ட பாரததேசம், இன்று இவ்வித பிரிவினை வாதத்தை முறியடிக்க முற்போக்குச் சக்திகளைத் திரட்டுவதில் வெற்றி காணுமா?

அகில இந்திய அடிப்படையில், சமய சமுதாய அரசியல் தலைவர்கள் பற்றுக்குறையே இத்தகைய பூசல்களுக்கும் குழப்பங்களுக்கும் காரணம்; மாநில சுயாட்சி விருத்தியடைய வேண்டுமென்ற அவசியம் உண்டு. அதேவேளையில் பாரதம் உலகின் ஜனநாயக நாடுகளில் முன்னணி வகிக்க வேண்டியதகைமைகள் உண்டு.

இதற்கு முட்டுக்கட்டையாகவிருக்கும் பிரச்னைகளில் அரசாங்க மொழி ஹிந்தி என்ற பிடிவாதம் ஒன்று. ஹிந்தியை விரும்பிப் படிக்காத, படிக்கும் அவசியமில்லாத மாநிலங்கள் பல. எனவே காலத்துக்காலம் இது ஒன்றே அகில இந்திய அரசகரும மொழியென்ற பிரகடனம் பல மாநிலங்களில், குறிப்பாகத் தெற்கில் பெரும் எதிர்ப்பை உண்டாக்கிவருகிறது.

பிரதமர் நேரு ஹிந்தியுடன் ஆங்கிலம் என்ற வாக்குறுதியை நீடிக்க முடியுமானால் இவ்விரண்டையும் அரசாங்க மொழிகளாக்குவது விவேகமான செயல். தமிழ்நாட்டில் 'தமிழ் தமிழ்' என்று கோஷம் போடும் தீவிரவாதிகள் ஆங்கிலத்தை விரும்பிப் படிப்பது நியாயமாகும். ஆனால் தமிழை வளர்க்கும் பெருமுயற்சியில் அக்கறை காட்டுவதில்லை.

தேசியரீதியில் ஹிந்தி படித்தல் நலம், ஆங்கிலம் உயர் கல்விக்கு மிக அவசியம். தமிழ்நாட்டின் தாய்மொழியாகிய தமிழை இன்றைய விஞ்ஞான அறிவுப் பெருக்கத்திறக்கேற்ற வகையில் விருத்தி செய்து வளர்ப்பது தமிழ்நாட்டுக்கு மிக மிக அவசியம்: அவசியமற்ற தமிழ் என்ற கோஷம் மொழித் துவேஷத்தை வளர்க்கவல்லது.

### பிலிப்பைன்ஸ்

மக்களின் பூரண ஆதரவில் ஆட்சியை நடத்தும் திருமதி அக்கினோ, நாடு இதுவரை பட்ட துயரங்களைத் துடைக்க எடுக்கும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை. எதிர்ச் சக்திகளை மடக்கிப் பிடிக்கவும், வளைந்து சமாதானப் போக்கில் ஒன்றுபடுத்தவும் அவருக்கு உண்டான ஆற்றல் அசாதாரணமானது. பத்தொன்பது வருடப் போரை நிறுத்தி சமாதானப்பேச்சுக்கு கம்யூனிஸ் கெரில்லாக்களைத் தம் வசப்படுத்துகிறார்.. 'கிட்டாதாயின் வெட்டென மற' என்ற பாங்கில் ராணுவத்தைப் போருக்குத் தயாராகவிருக்கும்படி கட்டளை.

பல தடைகளும் தொல்லைகளும் உள்ள நாட்டில் அக்கினோவின் தலைமையை எதிர்ப்பவர்கள் ஹவாயில் ஓய்வெடுக்

[11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகட்டும் படாடோபமும் பரமனுக்குகந்ததல்ல

இறைவனின் குமாரனாக வந்த இயேசு கிறிஸ்து அதிகாரத்தையும் ஐசுவரியங்களையும் உலக சுகபோகங்களையும் தமதாக்கிக்கொண்டு உல்லாசமாக வாழ்ந்திருக்கலாம்.

ஆனால் அவ்வாறு செய்வதற்காக அவர் அனுப்பப்படவில்லை. மனிதர்கள் மீது இறைவன் கொண்ட கருணையினால் தனது குமாரனை அந்த மனிதர்களுக்காக துன்பமுறும்படி அனுப்பினார். மனிதர்களின் துன்பங்களை தன் துன்பங்களாக்கப்பாவித்து அதன் மூலம் அவர்களை மீட்பதற்காகவே இறைகுமாரன் இங்கு அனுப்பப்பட்டார்.

அவர் தமது சீடர்களைத் தெரிவு செய்த பொழுது பெரும் ராஜகுமாரர்களை தேடி செல்லவில்லை. பணக்காரரை செல்வாக்குள்ள மனிதர்களை அவர் நாடவில்லை சாதாரண மக்களிடமிருந்து மிகவும் நலிவுற்ற மக்கள் மத்தியிலே தமது சீடர்களை அவர் தெரிந்தெடுத்தார்.

மிகவும் சாதாரண மக்கள் மத்தியிலேயே அவர் நடமாடினார். ஒதுக்கப்பட்டவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள் உதவியில்லாதவர்கள் நாதியற்றவர்கள் மத்தியில் யேசு கிறிஸ்து மிகவும் சரளமாகப் பழகினார். சாதிகளிலிருந்து ஒதுக்கப்பட்டவர்களானபொது மனிதர்களோடும் பாவிகளாகக் கருதப்பட்டவர்களோடும் அவர் தொடர்புகொண்டார்.

தீண்டத்தகாதவராகக் கருதப்பட்ட சமாரிய பெண்ணிடம் ஒரு தடவை குடிப்பதற்காக தண்ணீர் தரும்படி அவர் கேட்டபோது அவள் தயங்கினாள். அதிர்ச்சியுற்று மயங்கிப்போனாள்.

உலகில் பெருமைக்காகவும், புகழுக்காகவும் செல்வாக்குக்காகவும் மனிதர்கள் அலாய்ப்பறந்துக் கொண்டிருந்த காலமது.

அவருடைய சீடர்கள் மத்தியிலும் கூட ஒருதடவை யார் பெரியவன் என்ற விவாதம் எழுந்தது.

கிறிஸ்துசொன்னார், "எவன் ஒருவன் தன்னைத்தான் உயர்த்துகிறானோ அவன் தாழ்த்தப்படுவான், எவனொருவன் தன்னைத்தான் தாழ்த்துகிறானோ அவன் உயர்த்தப்படுவான்" என்று.

உடலால் உழைத்து துன்பப்படுகிறவர்களை அவர் நேசித்தார். அவர்களின் உழைப்பை அவர் மதித்தார்

"பாடுபட்டு பாரம் சுமக்கிறவர்களே என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்றார் யேசு.

பணிவையும் பண்பையும் அவர் பாராட்டினார்.

தாம் போதித்த விதத்திலேயே வாழ்ந்தார்.

தம் மகிழ்ச்சியை பிற மனிதர்களுடன் பகிர்ந்துகொள்ளத் தயாராய் இருக்கிறார்கள்?

படாடோபமும் பகட்டும் மனிதனுக்குரியதல்ல, மனித குமாரன் இவைகளை ஒரு பொருட்டாகவே மதித்ததில்லை.

மாட்டுத் தொழுவத்திலே வைக்கோலின் மீதினிலே பிறந்து தவழ்ந்து வளர்ந்த யேசு கிறிஸ்துவின் வாழ்க்கை முழுமையும் இந்த எளியவாழ்



இன்று கிறிஸ்மஸ் விழாவை க்கையின் தன்மைகள் பிரதிபலித் மகிழ்ச்சியோடு கொண்டாடும் தன, மனிதர்களில் எத்தனை பேர்

— 'பெ'

## எனக்காக . . .

அன்பில் மாறாத தேவன்
அருளில் மாறாத தேவன்
இரக்கத்தில் மாறாத தேவன்
எளிமையில் மாறாத தேவன்
எங்களிடம் வாழும் தேவன்
மனுமகனாய் மண்ணுலகில்
பிறந்திருக்கிறார்.

— ஜீவன்

## உறுதி செய்வோம்

தன்னலம் பறந்த பொது வாழ்வின் மூலம் உலக மக்களின் மீட்பை உறுதிசெய்தவர் இயேசுபெருமான். அவர் வாழ்வின் ஒவ்வொரு செயலும் சொல்லும் இதனை நன்கு நிலைநிறுத்தியதோடு அவரால் வழிநடாத்தப்பட்ட சீடர்களையும் இவ்வழியே இட்டுச் சென்றது. அந்த நல்வழியே நாமும் செல்ல புனிதபாலன் பிறப்பை முன்னிட்டு உறுதி கொள்வோம்.

## கிறிஸ்துவின் பிறப்பு

கிறிஸ்து தாவீதின் ஊரான பெத்லெகேமில் பிறந்தார். அங்கு சத்திரத்தில் இடம் கிடைக்காததால் மரியன்னை அவரை ஒரு மாட்டுத் தொழுவத்தில் பெற்றெடுத்தாள். அவரது பிறப்பைப் பற்றிய நற்செய்தி யூத சமுதாயத்தில் பண்பற்ற எளிய மனிதராக மற்றவர்களால் ஒதுக்கிவைக்கப்பட்ட இடையர்களுக்கே முதலில் அறிவிக்கப்பட்டது. இவ்வாறு அவர்களைப்போன்ற ஏழை எளியவர்களே உலகில் இறைவனின் தயவுபெற்றவர்கள் என்று எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இத்தகையவர்களே அமைதியின் மன்னனாக அவனியில் அவதரித்த இறைமகன் அளிக்கும் அமைதியைப் பெற அருகதையுடையவராவர்.

— புனித லூக்காஸ் 2:1-14


வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள், அனைவருக்கும்
இனிய நத்தார்-புத்தாண்டு நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கிறோம்.

பிறக்கின்ற புத்தாண்டு சகலருக்கும்
சுபிட்சம் நிறைந்ததாக மலரட்டும்!

எம்மிடம்
கேக் தயாரிப்புக்கான சகல பொருட்கள்
குளிர்பானத் தயாரிப்புக்கான பொருட்கள்
இறக்குமதி செய்யப்பட்ட பல பொருட்கள்
மாஜரின், ஜாம் வகை, கோடியல், கல்தாரு, ஈச்சம்பழம்,
எசென்ஸ், கலறிங், வனிலா அனைத்துக்கும்

யாழ்ப்பாணத்தில் பெயர்பெற்ற ஒரே நிறுவனம்.
வியாபாரிகளும், உற்பத்தியாளர்களும் தமது தேவைகளுக்கு
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.
வியாபாரிகளுக்கு விசேட சலுகையுண்டு.

மலிவாகவும், சுவையாகவும், கேக் பண்டங்களை தயாரிப்பதற்கு
நாமே பொருட்களை வழங்கிவருகிறோம்.
எதுவானாலும் எமக்கு ஒருமுறை தொலைபேசியில் தொடர்புகொள்ளுங்கள்:

பெட்டாஎசன்ஸ் சப்பிளையர்ஸ்
(இறக்குமதியாளர், விற்பனையாளர்)

223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2 4 8 2 3

தலைமையகம்:
18/1 டாம் வீதி,
கொழும்பு - 12.
தொலைபேசி: 26235 – 549269



தற்பொழுது விற்பனையாகிக் கொண்டிருக்கிறது
உங்கள் அபிமான
சிக்மா பம்ப்ஸ்
(CEYGMA PUMPS)
மின்சாரத்தில் இயங்குபவை :

| | | |
|---|---|---|
| ½ HP | 1"X1" | ரூபா 3000/- |
| ½ HP | 1½"X1¼" | ரூபா 3500/- |
| 1 HP | 1½"X1¼" | ரூபா 4500/- |
| 1 HP | 2" X1½" | ரூபா 5000/- |
| 1½HP | 2"X2" | ரூபா 6250/- |

மண்ணெண்ணெயில் இயங்கும்
2" இங்கிலிஷ் வில்லியர்ஸ் (ஜூனியர்) ரூபா 6250/–
எமது பம்புகள் அனைத்தும் ஒருவருட உத்தரவாதமுள்ளவை
இவைதவிர உங்கள் தேவைக்கேற்ப விஷேச 'பம்ப்'கள் மோட்டருடன் இணைத்துக்கொடுக்கப்படும். சிக்கனத்திற்கும் சிறப்பான சேவைக்கும் உகந்த நீர் இறைக்கும் இயந்திரங்களைத் தெரிவு செய்யதொடர்பு கொள்ளுங்கள்:
யுனைற்றெட் அக்றோ
என்ஜினியரிங்
533, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(இராசாவின் தோட்டம் - ஸ்ரான்லி வீதி சந்தி)
[C 6463] யாழ்ப்பாணம் தொலைபேசி: 22747


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கு ஒரு இறை குழந்தை

"குழந்தையைத் துணிகளால் சுற்றி முன்னிட்டியில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள்." [லூக் 2:11]

இது மாபரன் இயேசுவின் பிறப்பை மக்களுக்குத் தெரிவிக்கும் முகற்படியாக இறைதூதன் இடையர்களுக்கு மொழிந்த வார்த்தைகளாகும்.

**பெத்தலேமிலே ஒரு குழந்தை...,.."**

இறைமகனுய் இறைத் தன்மையில் விளங்கிய கிறிஸ்து தன்னைத் தாழ்த்தி, அடிமையின் கோலம் பூண்டு, மனிதருள் மனிதனுய், சன்னித் தாயின் சிறு உதரத்திலே அடங்கிக் குழந்தையாகப் பிறக்கின்றார்.

ஒருவன் குழந்தையாயிருக்கும்போது, உடல், உள, அறிவு வளர்ச்சியில் சிறியவனுகவே இருக்கின்றான். ஆனல் அக்குழந்தை தூய்மையையும், தெய்வீகத் தன்மையையும் தன்னகத்தே கொண்டுள்ளது இப்படியொரு சிறிய குழந்தையாகவே மாபரன் இயேசு இப்பூவுலகில் உதயமானுர் அவர் நினைத்திருந்தால் வேறுவிதத்திலும் மனுக்குல வரலாற்றில் புகுந்திருக்கலாம்!

இப்படியாக, சக்தியற்ற சிறிய பாலகனுக அவர் ஏன் தோன்றினுர்? ஆம், தன்னைத் தனது பாவமூட்டங்களினுல் சிறுமைப்படுத்திக்கொண்டிருக்கும் மனிதனைத் திரும்பத் தன்னிடம் சேர்ப்பிப்பதற்காகவே, இயேசுபரன் சிறியவனிலும் சிறியவனுக சின்னக் குழந்தையாகப் பிறந்தார்.

மனித இனத்தின் தொடக்கத்திலிருந்தே மனிதன் இறைவன் விருப்பப்படி நடவாமல் இறைவனிலிருந்து அவர் விரும்பும் வாழ்க்கையிலிருந்து விலகிச்செல்லத் தலைப்பட்டான் இந்த உடைந்துபோன, உடைந்து போய்க்கொண்டிருந்த இறை மனித உறவுப் பாலத்தை இணைக்கும்பொருட்டுத்தான் இறைத் தந்தை தம் திருமகன் கிறிஸ்துவை இவ்வுலகிற்கு மனிதனுக அனுப்புகின்ருர் இங்கே கிறிஸ்து மனிதனை மீட்கத் தானும் மனிதனுகின்ருர் கடைநிலையில் இருப்பவனைக் காப்பாற்ற அவன் இருக்கும் இடத்திற்கே இறங்கிவந்து விட்டார்.

ஆனல் எம்மில் ஒருவராக எமது குழந்தையாக எமத்தியில் பிறந்திருக்கும் கிறிஸ்துவை கண்டு கொள்ளாமல் வழமையான இயந்திரகதியான வாழ்க்கை நியதியில் நாம் ஓடிக்கொண்டிருக்கின்ருேம். பழைமையான பாவத்தெஷிகள் புதுமையான பன்முக வடிவங்களில் எமது வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இன்னும் நாம் இறை உறவிலிருந்து பரிந்து சென்றுகொண்டே இருக்கின்ருேம். அவரை விட்டு தூரச்செல்ல எத்தனத்துக் கொண்டேயிருக்கின்ருேம். ஆனல் அந்த இறை



வன் திருப்பாலகனுக எம்மிடையே எம்மில் ஒன்றுக வந்துவிட்டார். இனி நாம் அவரை விட்டு எங்கேயும் ஓட முடியாது எம்மை உயர்த்த தம்மைத் தாழ்த்த அந்தக் குழந்தையோடு உடலாக உள்ளத்தால் ஒன்றுகுவோம்

**குழந்தையை துணிகளால்**

**சுற்றியிருக்கக் காண்பீர்கள்**

தோலைக் குத்தித்துளைக்கும் மார்சழிக் குளிர். இந்தக் குளிரை எப்படி ஒரு பச்சைப் பாலனின் மென்மையான உடல் தாங்கும்? குளிர்தாங்க முடியாமல் அவதியுறும் தன் சிசுவை கந்தைத் துணிகளினுல் போர்த்திக் கட்டுகின்ருள் அன்னை மரியாள். அவளுக்கு நல்ல கம்பளியோ, பட்டாவணிகளோ எதுவும் கிடைக்கவில்லை. பாவம் அவர்கள் ஏழ்மைக்கு இலக்கணமாயிருந்தார்கள். இந்நிலையில் அவளுக்குக் கிடைத்தது கிழிந்த கந்தலாடைதான்.

இந்த நிகழ்வு யேசுபரனின் அப்போதைய இயலாமையை பெலவீனத்தைக் காட்டுகின்லது. அந்த பெலவீனத்தை அவர் நன்ருக அனுபவிக்கின்ருர் இயேசு தனது பிற்பட்ட வாழ்க்கையிலும் பல கட்டங்களில் தனது மனித பெலவீனத்தை வெளிப்படையாகவே காட்டுகின்ருர். ஆனுல் அவர் எக்காரணம் கொண்டும் தன்னில் இருந்த மனித பெலவீனத்தால் மூழ்கடிக்கப் படவில்லை. அவற்றை எப்பொழுதும் மேற்கொண்டே வாழ்ந்திருக்கின்ருர் அன்னை மடி தொடங்கி சிலுவையில் தனது இன்னுயுரை ஈந்தளிக்கும் வரையிலான அவரது வாழ்க்கைச்சித்திரம் இதற்கு ஆதாரம். மனிதனுக வந்தமையால்,

பலவீனங்களுக்கும் ஆளான அந்த இறை மகன், இன்று எங்களுக்கு புத்துயிர் தருகின்ருர். எங்கள் அன்றாட வாழ்க்கையில் எமது பல்வேறு பட்ட பெலவீனங்களில் இந்த இறைவனை நினைப்போம். அவர் எங்கள் சக்தியின்மையிலும் செயலாற்ற வல்லவர் என்ற நம்பிக்கையில் எங்களுக்கு இடர்கள் ஏற்படும்போது நாம் முற்ருக ஒடிந்துவிடாது தடைகளைத் தகர்த்தெறிந்து நிறை வாழ்வை நோக்கிச் செல்ல இயேசுபாலனை வேண்டுவோம்.

**முன்னிட்டியில்**

**கிடத்தியிருக்கக்**

**காண்பீர்கள்**

உலகின் பலகோடிகளிலும் எத்தனையோ பேர் வசதிபடைத்த இவ்விடங்களிலும், மாட மாளிகைகளிலும்பிறந்துகொண்டிருந்த வேளையில், இங்கே இறைவனின் மகன் மாட்டுத் தொழுவத்தில் பிறக்கின்ருர். பலகுழந்தைகள் பஞ்சணையில்வளர்த்தப்படும்வேளையில், இந்த இறைபாலன் மாடுகள் உண்டபின் எஞ்சிய வைக்கோல்க் கட்டைகள் பரப்பப்பட்ட முன்னிட்டியில் கிடத்தப்படுகின்ருர்.

ஏன்? இந்த வழியை இறைவன் தெரிந்துகொண்டார்? நாம் எமது வாழ்க்கையில் முரடானது, கஷ்டமானது, நடைமுறைப்படுத்த முடியாதது என்று நினைக்கும் பல விடயங்கள், உண்மையாக இறைவனுேடு ஒன்றித்த எமது வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. அதேபோல் நமது வாழ்க்கையில் எது நமக்கு நன்மை, சுகம் தரும் என்று நினைக்கின்ருேமோ அவை எங்களை இறைவனிடமிருந்து பிரிக்கும் தடைகள் என்பதை எமக்கு உணர்த்தவே அந்த இறைவன் முன்னிட்டியை தனது தொட்டிலாக்கினுர்.

எமது நடைமுறை வாழ்விலே! நாம் எதைச் செய்தாலும், எமக்கு ஒரு நேரடி நன்மையைக் கருதிக் கொண்டே செய்கின்ருேம். அது இறைச் சித்தத்திற்கு எதிராகக்கூட இருக்கலாம், நாம் தேடும் பணம், பதவி, பட்டம், புகழ்...... போன்ற பலவும் எமது வாழ்க்கையை சுகபோகத்தில் சுழிக்க நாம் தேடும் செவ்வந்தப் பூக்களே. ஆனல், உண்மை, நீதி, சமாதானம், சமத்துவம, சகோதரத்துவம்...அன்பு...போன்ற குழுமியங்களுக்காக நாம் வாழ முனைவதில்லை. அப்படி வாழ முனையும்போது, துன்பங்கள், சோதனைகள் குறுக்கிடுகின்றன. அவை எம்மை பற்றி, எமது குருதியைச் சிந்த வைக்கின்றன. இதற்காகப் பயந்து இப்படியானதொரு வாழ்வைத் தேட்டுப் பார்க்கவேனும் நாம் விரும்புவதில்லை.

இந்தநிலை மாறவேண்டும்; அன்று இயேசுபாலனை முன்னிட்டியில் குத்திக்கொண்டிருந்த வைக்கோற் கட்டைகளே இவ்விழுமியவேட்கைகள்; நாமும் கிறிஸ்தவர்களாக

(7ம் பக்கம் பார்க்க)


வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும்

இனிய நத்தார் - புத்தாண்டு நல்வாழ்த்துக்களை

தெரிவித்துக்கொள்கின்ருேம்.

பிறக்கப்போகும் ஆண்டில்சாந்தியும்
சமாதானமும் நிலைக்க
அனைவரும் பிரார்த்திப்போமாக

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன்மையான வியாபாரிகளாக
பெயர் பெற்றவர்கள் நமே.

0 வானெலிப் பெட்டிகள்.
0 றேடியோ உப-உறுப்புக்கள்.
0 தொலைக்காட்சிப் பெட்டிகள்.
0 சகலவிதமான மேசை, சுவர், கை மணிக்கூடுகள்.
0 அலங்கார அழகு சாதனங்கள்.
0 ஸ்ரெபலைசர்கள்.
0 படச்சுருள்கள்.
0 பரிசுப் பொருட்கள் அனைத்துக்கும் முன்னனி வியாபாரிகள்:

நியு சிற்றி றேடர்ஸ்

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 24055 (A 3266)

நத்தார் - புதுவருட மலிவு விற்பனை
இன்றே விஜயம் செய்யுங்கள்

ராஜு ஸ்ரோர்ஸ், 67-69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

எங்கள் அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
மங்களகரமான நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்

★ நத்தார் - புதுவருட பிறந்ததின வாழ்த்து மடல்களுக்கு

ராஜு ஸ்ரோர்ஸ்

★ கேக் குளிர்பான ஐஸ்கிறீம் இனிப்புத் தயாரிப்புக்கான சகல பொருட்களுக்கும்

★ அலங்கார, ஆடம்பர அழகுசாதன அன்பளிப்புப் பொருட்களுக்கும்

★ எவர்சில்வர், அலுமினிய, எனமல், கிளாஸ், பிளாஸ்ரிக் சாமான் களுக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்
ராஜு ஸ்ரோர்ஸ்

ராஜு ஸ்ரோர்ஸ்

போன்: 22372

67-69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(A 3363)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் உருளைக்கிழங்கு தக்காளி பயிர்களைத் தாக்கும் முன்பின் கூற்று வெளிறல் (ஏர்லி லேட் பிளைட்) நோயை வெகு சுலபமாகக் கட்டுப்படுத்த புதிய விஞ்ஞான கண்டு பிடிப்பு

# கோசைட் 101

குயிப்ரிக் ஹைட்ரொக்சைட் உலோக செம்பு 50% பூஞ்சண கொல்லி

Griffin

திராட்சை, புகையிலை. மிளகாய் வெங்காயம், பூசணிவகை கரட், கோவா, போஞ்சி, சலாது. கோப்பி, தேயிலை, வெற்றிலை அலங்காரத்தாவரம் மற்றும் பயிர்களில் ஏற்படும் பூஞ்சண நோய்களை கட்டுப்படுத்த சிபாரிசு செய்யப் பட்டுள்ளது.

இது அமெரிக்க கிரிப்பின் இன்டர்நெஷனலின் தயாரிப்பு

விலை ரூ. 25/50 அதற்கு மேலும்

அங்லோ-ஏஷியன் பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட்
சாற்றட்வங்கிக் கட்டிடம் கொழும்பு 1.



எச்சரிக்கை:
எல்லா பீடைநாசினிகளும் அபாயகரமானவை கவனமாகக் கையாளவும்.

Skarab


## இராணுவம் சுட்டு வயோதிபர் பலி

வல்வெட்டித்துறை, புளியங்கவைல இராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வயோதிபர் ஒருவர் பலியானார்.

சிந்தாமணி (வயது 80) என்னும் வயோதிபரே இவ்வாறு பலியானவராவார். மேலும் புலிகளால் தகர்க்கப்பட்ட மண் மூடை அரணிலிருந்து இராணுவத்தினர் குறிபார்த்து சுட்டதில் அப்பாதையில் செல்லும் அப்பாவி மக்களும், கால்நடைகளும் காயமடைவதுடன் பலியாகும் சம்பவங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (கே)

## வவனியாவில் இருந்து பூஸா கைதிகளுக்கு மருந்து

வவுனியா, புதன்

காலி பூஸாவில் உள்ள கைதிகளுக்கு தேவையான மருந்து வகைகளைத் தந்தால் அது ஏற்றுக்கொள்ளப்படும் என மேற்படி முகாம் இராணுவ உயர் அதிகாரி தெரிவித்ததாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் கூறின.

இந்தவகையில் மிகவிரைவில் வவுனியாவிலிருந்து தேவையான மருந்துவகைகளுடன் ஒரு குழு பூஸாசெல்லவுள்ளது.

சமூக சேவை ஸ்தாபனம் ஒன்றின் உதவியுடன் தேவையான மருந்துவகைகளை பெற சில முக்கியஸ்தர்கள் ஈடுபட்டுள்ளனர் என விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறின. (கே)

## எமக்கு

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்து பாலனின் ஒன்றிக்க வேண்டுமாயின், அவர் கொண்ட விழுமிய வேட்கையில் ஒன்றாகி, கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்காகவே வாழ்வோமாக!

— இரா. குசைதாசன்


வாடிக்கையாளர்களுக்கு, எமது நத்தார்-புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

கலர்படங்களை யாழ்ப்பாணத்தில் தயாரிப்பது மட்டுமல்ல; கம்பியூட்டருடன் — தரம், விலை, விரைவு, ஆகிய மூன்றிலும், கலர்படங்களை வழங்குவதில் முன்னோடிகள்.


★ (PROCESSING & PRINTING செய்பவர்களுக்கு)

கலர்படம் (P.C.) போஸ்கார்ட் ரூ. 4-75 மட்டுமே

★ கலர்ப்படம் கழுவுவதற்கு மட்டும் PROCESSING ONLY ரூ. 20/-

# கொழும்பு ஸ்ரூடியோ

164. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன்: 22410.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துன்பத்தின் மத்தியிலும் மகிழ்ச்சி தருவது கிறிஸ்மஸ்!

இன்று நாங்கள் கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடுகிறோம். உலகளாவிய ரீதியில் கிறிஸ்துவின் பிறப்பு சிறப்பான முறையிலே கொண்டாடப்படுகின்றது. எல்லா இடங்களிலும், தனிப்பட்ட முறையிலும், பொதுவான ரீதியிலும் ஆயத்தங்கள் இந்தக் கிறிஸ்து பிறப்பிற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வீடுகள் அழகுபடுத்தல், சோடித்தல், கேக் போன்ற உணவு வகைகளைத் தயாரித்தல், புதிய ஆடைகள் தைத்தல், கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்கள் அனுப்புதல் போன்ற ஆயத்த வேலைகள் நடைபெற்றுவிட்டன. இவையெல்லாம் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் அடையாளங்களாகவும் அறிகுறிகளாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன.

மகிழ்ச்சிக்கு வழி வகுக்கும் கொண்டாட்டங்கள் எப்போதும் அடையாளங்களிலும் அறிகுறிகளிலும்தான் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்த அடையாளங்களிலும், அறிகுறிகளும் எமது கொண்டாட்டத்தின ஆழத்தன்மையையும் உண்மையான கருத்துக்களையும் வெளக்கொணருகின்றன. எமது கொண்டாட்டங்கள் அர்த்தமுடையனவாக இருக்க வேண்டுமாயின் அடையாளங்களும், அறிகுறிகளும் முதலில் அர்த்தமுடையனவாக இருக்க வேண்டும். இரண்டாவதாக நாங்கள் வாழ்கின்ற உண்மையான வாழ்நிலையோடு தொடர்புடையதாக உண்மையான வாழ்நிலையில் அனைத்து அனுபவங்களையும் வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். மூன்றாவதாக அடையாளங்களும், அறிகுறிகளும் அவற்றால் கொண்டாடப்படும் விழாக்களின் உட்கருத்தையும் அது கொண்டு வரும் பயனையும் நிரூபிப்பதோடு வெளிப்படுத்தவும் வேண்டும். நான்காவதாக இந்த வெளிப்படுத்துதல் வெறும் வார்த்தைகளிலோ வெளி ஆடம்பரங்களிலோ இருக்காமல் எமது வாழ்வில் எல்லா நிலைகளிலும் வெளிப்படுத்தப்பட வேண்டும். இவற்றை நாம் உரிய முறையில் புரிந்து கொண்டு வாழ முற்படும் போதுதான் நாம் கொண்டாடும் கிறிஸ்மஸ் விழா ஒரு உண்மையான கொண்டாட்டமாக இருக்க முடியும்.

கிறிஸ்மஸ் ஒரு மகிழ்ச்சியின்

ரூபன் மரியாம்பிள்ளை

(9-ம் பக்கம் பார்க்க)


## அம்பலவாணர் அன் சன்ஸ், யாழ்ப்பாணம்

விடுக்கும்

### பகிரங்க அறிவித்தல்

இலங்கைத் தேசிய கடதாசிக் கூட்டுஸ்தாபனத்தால் விநியோகிக்கப்படும் அப்பியாசக் கொப்பிகள் தாராளமாக எம்மால் விநியோகிக்கப்படுகின்றன. வியாபாரிகள் தமது தேவைகளைப் பதிவு செய்தால், பதிவின் அடிப்படையில் விநியோகிக்கப்படும்.

— நிர்வாகிகள்.

கடந்த ஐந்தாண்டு காலமாக, யாழ்ப்பாணத்தில் பாடசாலை உபகரணங்களுக்கு செயற்கைத்தட்டுப்பாடு நிலவினாலும், எம்மிடம் எல்லாமே நியாயவிலையில் கிடைத்திருக்கிறது. உங்கள் தேவை எதுவானாலும் வழங்கத் தயாராக இருக்கிறோம்.

- ★ பாடசாலை உபகரணங்கள்
- ★ அப்பியாசக் கொப்பிகள்
- ★ காரியாலய பாவனைப்பொருட்கள்
- ★ அன்பளிப்புப் பொருட்கள்
- ★ மின் அலங்காரப் பொருட்கள்
- ★ மின்சார உபகரணங்கள்
- ★ போட்டோஸ்ரட் உபகரணங்கள்

அனைத்துக்கும் எம்மை நாடுங்கள்

மொத்த சில்லறை வியாபாரிகள் நன்மைகருதி எமது நிறுவனம், 25-12-86 முதல் 15-01-87 வரை சகல விடுமுறை தினங்களிலும் காலை முதல் மாலை வரை திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

பொருள் தேடுவோர் எமை நாடுவது வியப்பில்லை.

## அம்பலவாணர் அன் சன்ஸ்

(அங்கீகாரம் பெற்ற முகவர்களும் இறக்குமதியாளர்களும்)

196, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

(A 3374)



## பிரயாண ஒழுங்கு

'யூனிவேர்சல் ஏஜென்சி' ஸ்தாபனத்தாரின்

### பணிவானவேண்டுகோள்

இவ்வருட முடிவில் எமது வரவு செலவுக் கணக்கைப் பூர்த்தி செய்யத் தீர்மானித்திருக்கிறோம்;

அதையிட்டு எமது காரியாலயத்திலும், எமது உப-ஏஜென்சியுடனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பு கொண்ட அனைவரும் இம்மாத முடிவுக்குள் நீங்கள் தொடர்புகொண்ட விடயம் பற்றியும், உங்கள் கொடுக்கல் வாங்கல் பற்றிய விபரத்தையும், எமது காரியாலயத்திற்கு வந்து தெரிவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

எமது ஸ்தாபனத்திடம் கடன் பெற்றுச் சென்றோரின் பொறுப்பாளர்களும் தவறாது வந்து தொடர்பு கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் 1987ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான எமது பிரயாண ஒழுங்குகளின் விபரம்:

★ லிபியா

ஒயில் கம்பனி வேலையாட்கள்
(150 வெற்றிடங்கள்)

★ சவுதி அரேபியா

கிளீனேர்ஸ் OPEN VISA வயது 26-40
[160 வெற்றிடங்கள்]

★ குவைத்

ஏற்கனவே எம்முடன் தொடர்புகொண்டவர்களுக்கு மட்டும்.

பிரயாண ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன என்பதையும் அறியத்தருகின்றோம்.

அத்துடன்
பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங் என்பனவும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

இத்துடன் நத்தார், புதுவருட வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்,

Universal Agencies
(யூனிவேர்சல் ஏஜென்சி)

125, [455] ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில்- பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு) முன்பாக

(A 3265)



## புஸ்பா ரேட்ஸ்

(எசன்ஸ் ஹவுஸ்)



எங்கள் அன்பர்கள், ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மங்களகரமான நத்தார், புதுவருட் வாழ்த்துக்கள்!!!

எம்மிடம் கேக் சாமான்கள், குளிர்பானத் தயாரிப்புக்கான சகல மூலப்பொருட்கள், ஐஸ்கிறீம் வகைக்கானவைகள், சோடனைப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள், கிளாஸ் வகைகள், றெஜிபோம் பெட்டிகள், பொலித்தீன் ரேக்கள், இந்தற்றிக் கற்பூரம், பரவின்வக்ஸ், வைற் ஒயில் முதலியன.

தரத்திலும், மற்றைய ஸ்தாபனங்களிலும் பார்க்க மலிவாகப் பெறக்கூடிய ஒரே ஒரு ஸ்தாபனம்:-

"புஸ்பா ரேட்ஸ்"

யாழ். நகரில் முதன் முதலில் நிறுவப்பட்டதும், அநேக ஆதரவாளர்களின் நன்மதிப்பைப் பெற்றதும் "புஸ்பா ரேட்ஸ்" ஸ்தாபனம் ஒன்றே.

ஆதரவாளர்களின் தேவைகளைப் பல வருடங்களாக பூர்த்திசெய்து வருகிறோம்.

1987லிலும் சேவை செய்யக் காத்திருக்கிறோம்.

விஜயம் செய்யவேண்டிய முகவரி:-

## புஸ்பா ரேட்ஸ், (எசன்ஸ் ஹவுஸ்)

11/4 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி—24237

(A 3261)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த உணவு வேளை—

## யாழ் பீச் இன்சுடன் அமையட்டும்

இல 139 கடற்கரை வீதி,
(பழைய பூங்கா வீதிச்சந்தி), யாழ்ப்பாணம்.

புதுவருடத்தில் புது மெருகூட்ட உங்கள் குடும்பத்தினரும் கூழுக்குச் செல்லுங்கள். நாம் தருவது சுத்தமான சுகாதாரமான தேசிய கூழ். ஒவ்வொரு ஞாயிறு காலை 11-30 மணிமுதல் பிற்பகல் 2-30 மணிவரை.

**சுடச் சுடத் தேசிய கூழ்**

A-3380



வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது அன்பான

**நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்**

✶ ஜெனரல் ரி. வி. ✶ சம்சுங் ரி. வி. க்களின்
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

## "றேடியோ மனுவல்"

121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

றேடியோ, கசட், ரி வி, டெக், இதர மின்சார உபகரணங்கள் திருத்துபவர்களும் உதிரிப் பாகங்கள் விற்பனையாளர்களும்

எலக்ரோனிக் தொழில்நுட்ப வேலைகளில் சிறந்த அனுபவசாலிகளைக் கொண்ட ஸ்தாபனம்.

## "Radio Manual"

121, Stanly Road, Jaffna.

T. P. 24222 (A-3387)


## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

**மல்லாக மாவட்ட நீதிமன்றம்**

வழக்கு இல: ஈடு 6535

சிவதாசன் சச்சிதானந்தன்
தெல்லிப்பழை கிழக்கு

வழக்காளி.

1. வேலன் கந்தசாமி பெண் 2. கனகமணி
3. நன்னித்தம்பி சிவேந்திரம் 4. தவவதிதேவி பெண்
தெல்லிப்பழை கிழக்கு

எதிராளிகள்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணிகளை 1987ம் ஆண்டு தை மாதம் 7ம் திகதி (7 1-87) புதன்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை**

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 24000/-வும் மேலும் 120 0/- க்கு வருடமொன்றிற்கு 40% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1986ம் ஆண்டு சித்திரை மாதம் 11ம் திகதியில் இருந்து தீர்வைத் திகதியாகிய 1986ம் ஆண்டு யூலை மாதம் 10ம் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 5236-70(இதில் நடைபெற்ற செலவு ரூபா 2927-70 நடைபெறவேண்டிய செலவு ரூபா 1131-00 மேலதிகசமயாசமயச் செலவு ரூபா 1178-00) கொடுக்கவேண்டி இருப்பதாலும்.

**ஆதன இடாப்பு**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று கட்டுவன்இறை சுத்திக்கன்புலமும் சிமிளனும் மயிலனும் அடங்கிய ஆவரம்பிட்டி நிலப்பரப்பு (3) மூன்றும் பரணும் இதற்கு எல்லை கிழக்கு 12 அடி அகலப் பாதை வடக்கு நன்னியன் முருகனின் ஆதனம் மேற்கு எல்லுப்போலை கந்தசாமியின் ஆதனம் தெற்கு மிகுதி ஆதனம் இதடங்கலும்.

2. ஷெ இறை சுத்திக்கன்புலமும் சித்தியம்புளியடியும் சிம்பயப்புலமும சிமிளனும் அடங்கிய ஆவரம்பிட்டி நிலப்பரப்பு (2) இரண்டும் எல்லை கிழக்கு 12 அடி அகலப் பாதை வடக்கு மேலே சொல்லப்பட்ட ஆதனம் மேற்கு எல்லுப்போலை கந்தசாமியின் ஆதனம் தெற்கு மிகுதி ஆதனம் இதடங்கலும்.

க நவரத்தினம்.
நீதிமன்ற விற்பனையாளரும்
மதி பாவரும்.

தாவளை, வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை. 6-11-86. (C6525)

## மணிவாசகர் விழா

உரும்பிராய் புதன் கோண்டாவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் திருவாசகம் முற்றும் ஓதல் இறுதி நிகழ்ச்சியைத் தொடர்ந்து மணிவாசகர் விழாவும் நடாத்தப்பட்டது. முல்லை அதிபர் திரு சபாஆனந்தர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம பேச்சாளராகக் கலந்து

(11ம் பக்கம் பார்க்க)

## துன்பத்தின்

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

விழா 1986ல் நாம் இந்தக் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை எடுக்கும் போது கடந்த சில வருடங்களைப்போல கவலையிலும் அடுத்து என்ன நடக்குமோ என்ற கலக்கத்திலும் தான் இருக்கிறோம். அழிவுகளும், ஆக்கிரமிப்பு செயல்களும், அடக்குமுறையும், அதிகாரவெறியும் தான் தோன்றித்தனமான போக்குகளும், அராஜகசெயல்களும் அதிகரிப்பதால் அதன் தாக்கங்கள் ஒரு அமைதியான அன்பும், மகிழ்ச்சியும் நிறைந்த சமூகத்தில் எங்களை வாழ விடாது தடுத்துக்கொண்டிருக்கின்றன ஆனல் நாம் எந்தக் காலகட்டத்தில் வாழ்ந்தாலும் கிறிஸ்மஸ் தன்மகிழ்ச்சி தன்மையை இழந்துவிட முடியாது. நாம் வாழுகின்ற துன்பமான சூழலிலும் அந்தத் துன்பங்களின் மகிழ்ச்சியாக வாழ்வு கிறிஸ்மசை மகிழ்ச்சியாகக் கொண்டாடவும் நாம் தான் எம்மிலும் எம்மைச் சுற்றியும் மகிழ்ச்சியின் கோடுகளை வரைந்து கொள்ள வேண்டும்.

அஞ்சாதீர்கள்! இதோ மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று தாவீதின் ஊரிலே உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார் என்ற நற்செய்தியின் மகிழ்ச்சிச் செய்திகள் எம் மண்ணின் மாபெரும் மகிழ்ச்சி ஊட்டும் நற்செய்தியாக இருக்கட்டும்

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும் 25-12-1986



கணபதிப்பிள்ளை
சின்னம்மா

தோற்றம்: 09-07-1901
மறைவு: 25-11-1986

எங்கள் குலதெய்வமாக இருந்து எம்மையெல்லாம் வாழவைத்த தெய்வமே நீங்கள் இவ்வுலகை விட்டு பிரிந்து இன்று 31வது நாள். உங்கள் பிரிவால்தாங்க முடியாத வேளையிலும் தங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம் எமது தாயாரின் ஈமக்கிரிகையில் கலந்து கொண்ட சகலருக்கும் நன்றியை தெரிவிக்கின்றோம் இவளின்பிரிவால் துயருறும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், உறவினர்.
பண்டத்தரிப்பு-2. (A 3377)


உங்கள் உற்பத்தி பொருட்களுக்கு கவர்ச்சி விளம்பரங்கள் மூலம் வாடிக்கையாளருக்குத் தெரியப்படுத்துங்கள்.

நாம் உற்பத்தியாளருக்கு பொருட்களை சந்தைப் படுத்துவதற்கு துரித விளம்பரங்கள் மூலம் உதவுகின்றோம். இன்று நேற்றல்ல வியாபாரத் துறையிலும் விளம்பரத்துறையிலும் (20) வருடகால அனுபவம் பெற்ற ஜோ. எகட்டனின் நேரடி மேற்பார்வையில் இயங்குகின்றது.

## செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்

அடுத்த உங்கள் விளம்பர விற்பனைத் தேவைகளுக்கும் விளம்பரத் தேவைகளுக்கும் எங்களை நாடுங்கள். நாங்கள் உங்களுக்கு இலவச ஆலோசனைகளை வழங்கி எங்கள் மண்ணின் உங்களுர் உற்பத்தி பொருட்களுக்கு முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்கின்றோம். ஆகவே எம்மை நேரில் அணுகுங்கள்!

## ஜோ. எகட்டன்

## செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்

இல. 19/3, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(A-3384)



இதோ! முற்றிலும் இலவசம்!!

அங்கர் பால்மா பாவனையாளருக்கு

## ஜோண்ஸ் ஒவர்சீஸ் ஸ்தாபனத்தார்

**தரும் நத்தார் - புத்தாண்டு நற்செய்தி**

எமது அங்கர் மாவட்ட விநியோகஸ்தர்களான ஸ்ரான்லி வீதியில் அமைந்திருக்கும்

## சிற்றி ஏஜென்ஸி

ஸ்தாபனத்திடமிருந்து ஒரு அங்கர் மட்பாண்ட கோப்பையை முற்றிலும் இலவசமாக பெறுங்கள். நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் ஏழு அங்கர் 400கிறாம்பக்கெட்டின் அங்கர் என் குறிப்பிட்டிருக்கும் மேல் மட்டையை வெட்டி சேகரித்து ஸ்ரான்லி வீதியில் இருக்கும் சிற்றி ஏஜென்ஸியில் கையளித்து புத்தாண்டுப் பரிசாக கையிருப்பு முடியும் வரை பெற்றுக்கொள்ளுங்கள். முந்துங்கள் அங்கர் கோப்பையை பெற்றிட. அருந்துங்கள்

# அங்கர் - ANCHOR

**முற்றிலும் ஆடை நீக்காத செழுமையான பால்**

★ பிந்திய செய்தி ★

## ஜோண்ஸ் ஓவர்சீஸ்

லிமிற்ரட் ஸ்தாபனத்தார் உங்களுக்கு வழங்கும் இரு சலுகை அங்கர் தாரிப்புகளை ஸ்ரான்லி வீதியில் அமைந்திருக்கும் சிற்றி ஏஜென்ஸி ஸ்தாபனத்தாரிடமிருந்து ரூபா 200/- (இருநூறு)க்குள் வாங்கினல் ஒரு மட்பாண்ட அங்கர் கோப்பை முற்றிலும் இலவசம்.

இச்சலுகை கையிருப்பு இருக்கும்வரை மட்டும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

முந்துங்கள் அங்கர் கோப்பை பெற்றிட
அருந்துங்கள் அங்கர் பால்மாவை.

அங்கர் ஆடைநீக்காத முழுமைப் பால் என்பதை மறவாதீர்கள்.

விளம்பர அமைப்பு: ஜே எக்கட்டன் செனித் மாக்கற்றிங் அன் அட்வட்டைசிங் சிஸ்ரம், கொழும்புத் துறை வீதி, யாழ்ப்பாணம். (A3379)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்ற அறிவித்தல்

13, 14 பெரிய கடையில் இயங்கிய ஜி எஸ். லிங்கநாதன் அன் கோ. ஸ்தாபனம் 79, கே. கே. எஸ். வீதி M O சவ்ஸ் கூடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

**ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.**

[C 6428]



# லேத்மன் தேவை

திருநெல்வேலியில் அமைந்திருக்கும் தொழிற்சாலை ஒன்றிற்கு உடனடியாக லேத்மன் தேவை
நேரில் தொடர்புகொள்ளவும்.

**செல்லாசன்ஸ்**

118, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சடைத்தெரு பிள்ளையார் கோவில்முன்பாக) (C3269)



அரிய நூல்கள்! உரிமையாக்குங்கள்!!

**திருவெம்பாவைத்திறவு**

கட்டுரைகள், மூலம், பொருள், அரும்பதஉரை ஆய்வுரை அடங்கியது — விலை ரூபா 10/-

**சதியா? விதியா?**

Shakespeare's 'ஒதெல்லோ'' தழுவிய சமூக இலக்கிய நாடகம். அநாதை நிதிக்காக விலை ரூபா 15/
ஆக்கியோன்; முன்னாள் அதிபர், ஆங்கிலவிரிவுரையாளர்
க. கயிலாயநாதன் B. A., Dip Ed.
வட்டுக்கோட்டை, மாவடி, கலாநிலையம், பிரபல புத்தகசாலைகளில் பிரதிகள் கிடைக்கும். C-6514



# விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

எமது றேயல் உற்பத்திப் பொருட்களை யாழ் நகரில் ஓடர் சேகரிப்பதற்கும், வெளியிடங்களில் வானில் சென்று விற்பனை செய்வதற்கும் நன்கு அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

முன்பு இன்டஸ்ரீஸ் ஸ்தாபனங்களில் விற்பனைப் பிரதிநிதிகளாகக் கடமை செய்தவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். உங்கள் நற்சான்றுப்பத்திரங்களுடன் காலை 9-00 மணிக்கும் 3-00 மணிக்குமிடையில் வரவும். அடிப்படைச் சம்பளத்துடன், கொமிசனும் வழங்கப்படும்.

மாதம் 350/- ரூபாய் வருமானம் பெற வாய்ப்புண்டு. பிணைப்பணம் கட்டக்கூடியவராக இருக்க வேண்டும்.

**றேயல் இன்டஸ்ரீஸ்**

பொன்னையா லேன், ஆனைக்கோட்டை.
(குறிப்பு: பிடாரி உபதபாற்கந்தோருக்கு அருகாமையில்)
(C3267)


# இன்றைய பலன்

மாதம்: மார்கழி
திகதி: 10 (25-12-86)
கிழமை: வியாழன்
திதி: நவமி
நட்சத்திரம்: அத்தம்

மேடம்:- வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாயிருக்கும். சிறிய தலையிடிக்குமிடம் உண்டாம். சிலர் கடன்பட நேரிடும்.

இடபம்:- மனதிலும் உற்சாகம் பிறக்கும் இல்லச் சிறப்புமுண்டு. தந்தை வழி ஆதரவு முண்டு.

மிதுனம்:- அறிவுரைகள் மூலம் நல்வழியில் செல்லுவீர்கள் வாகனச் சிறப்புமுண்டு வரவிலும் திருப்தி உண்டு.

கடகம்: அதிஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு. குடும்பமும் சிறக்கும்.

சிங்கம்: முன்னேற்றம் தடைப்படும். உதவி செய்யப் போய் உபத்திரவம் கிட்டும் பிணிக்கு இடங்கொடாதிருக்கவும்.

கன்னி:- தவறான போக்குக்கு இடமுண்டு. எடுத்த காரியத்தில் தடையுமுண்டு கெடுக்கல் வாங்கலைப் பின்போடவும்.

துலாம்:- பொன்னான வாழ்வு கிட்டும். குடும்பத்திலும் சுமுகமான நிலை தென்படும். தொழில் முயற்சியும் சிறக்கும்.

விருச்சிகம்:- அவசரம் வேண்டாம், ஆயுத பீடைக்கு மிடமுண்டு. நில் நிதானி அமைதியுடன் காலடியில்.

தனுசு:- மேலதிகாரிகளின் ஆதரவும் கிட்டும். கல்வி முன்னேற்றமுண்டு குடும்ப வழியாலும் மகிழ்ச்சியுண்டு.

மகரம்:- சமூகத்தில் மதிப்பு யரும். நலன்தரும் சம்பவங்களும் இடம் பெறும்; தொழிலிலும் உயர்வுண்டு;


கும்பம்:- தனதானிய நஷ்டமுண்டு. பூமிப் பிணக்குத் தோன்றக் கூடும். கடமையில் கவனம் செலுத்தவும்.

மீனம் இல்லத்தில் இனிமை பிறக்கும் நலிவு சொல்லாமல் டறக்கும், கடமையிலுப் நன்மை பிறக்கும்.

திருமலை
வே. ரவீந்திரன்


அனைவருக்கும்

# நத்தார்-புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!




பிறக்கின்ற ஆண்டு
சகலருக்கும்
சமாதானத்தையும்
செல்வத்தையும்
தருமென
வாழ்த்துகிறோம்.

**தரமான முதல்தரமான ஓடுகளை**

**30 ஆண்டுகளாக**

நாமே விநியோகம் செய்துவருகின்றோம்

கட்டுமானப் பொருட்கள், பல வகையான பூச்சாடிகள் அனைத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

# எம். ரி. பொன்னம்பலம்

(முதல்தர ஓடு விற்பனையாளர்கள்)

631, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
போன்: 24432
(A3268)



**செனித் ஜோ. எகட்டன்**

தனது வாடிக்கையாளர்கள் அன்பர்கள் நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு உளம் கனிந்த

**கிறிஸ்தோகய வந்தனங்கள் உரித்தாகுக**

பிறக்கும் ஆண்டில் புதுமையில்திகழ்வோம் அதற்கு செபமாலை அன்னை துணை புரிவாளாக
செனித் ஜோ. எகட்டனும், ஊழியர்களும்.
(A-3382)



அதிவேகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது
நத்தார் கிறிஸ்தவப்பாடல்கள்

**ஜோ. எகட்டன் வழங்கும்**

ஹப்பி தயாரிப்பில்

16 முத்தானபாடல்கள் முத்துக் கவியல்களை தெரிந்திட முந்துங்கள் கைவிருப்பு சொற்பமே
மற்றும் யப்பானில் தயாரிக்கப்பட்ட மக்சல் கசட்டில் பதிவு செய்யப்பட்ட சினிமா பழைய பாடல்களும் கையிருப்பில் உண்டு.

விஜயம் செய்யுங்கள்;

**ஜோ. எகட்டன்**

19/3, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை
[A-3386] சுண்டுக்குளி.



**யாழ் நகரில் ஓர் புதிய உதயம்!**

பலர் எம்மை அணுகி மனஆறுதல் அடைகின்றனர். எம்மைஅணுகியபலர் வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் மனவிரக்திலைவிட்டொழியுங்கள். உங்கள் பிரச்சினைகள் எதுவாய் இருந்தாலும் எம்மை அணுகுங்கள் அதற்கு நாங்கள் பல ஆலோசனைகளை வழங்குகின்றோம்.

01 - 01 - 87 முதல் புதிய பாணியில் எமது உளவள ஆலோசனை நிலையம் இயங்கும்.

ஆலோசகர் குழு:
டாக்டர் க. சுகுமார் M B B. S. (Cey)
அருட்திரு எஸ். டேமியன் M A. (Hon) Coun. Psy. (Ottawa)
அருட்திரு எஸ். கே. கதிர்காமர் Dip. in Coung Psy. (Vellore)

ஆலோசனை நேரங்கள்:
ஞாயிறு, செவ்வாய், வியாழன்
பிற்பகல் 2-30 மணிமுதல் மாலை 5-30 மணிவரை
மற்றைய தினங்களில் பதிவு செய்தல்மட்டும்
காலை 8-30 மணிமுதல் மாலை 5-30 மணிவரை

நாடுங்கள்:

**உளவள ஆலோசனை நிலையம்,**

19/3, கொழும்புத்துறைவீதி,
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை)
[A-3383] யாழ்ப்பாணம்.



**யாழ். நகரில்**

இதோ! அறிமுகப்படுத்துகின்றோம்

அங்கர் குறூப் தயாரிப்பான அங்கர் குளிர்பானங்கள் கொழும்பு குளிர்பானங்களுக்கு மேலாக எமது மண்ணின் பாரம்பரிய உற்பத்தி அங்கர் குளிர் பானங்கள் எங்கள் மண்ணில் குளிர்பானங்கள் தயாரிக்க முடியும் என நிரூபித்துள்ளார்கள் அங்கர் குறூப் ஸ்தாபனத்தார்.

தித்திக்கும் 7 வகைகளில் இப்போது நகரில் தாராளமாக கிடைக்கின்றது அங்கர் குளிர்பானங்கள்
ஒரேஞ்பார்லி, நெக்டோ, ஜிஞ்சர் பியர், பிளேன் சோடா, லெமன் கிறஸ், ஒரேஞ் ரஸ், பைன் அப்பிள்.

சுவைத்து மகிழ்ந்திட 7 வகைகள் என்றும் உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு சிறந்ததையே சந்தையல் அறிமுகப்படுத்தி வரும் ஜோ எகட்டனின் விநியோகத்தில் சந்தைப்படுத்தப் படுகின்றது. அங்கர் குறூப் குளிர் பானங்கள் உங்கள் பண்டிகைக் காலங்களில் விருந்தினருக்கு டரிமாறிட நீங்களும் எமது உள்ளூர் வியாபார நிலையங்களில் வற்புறுத்திக் கேளுங்கள்.

**அங்கர் குளிர்பானங்கள்**

வியாபார விசாரணைகளுக்கு

**ஜோ. எகட்டன்**

செனித் மார்கட்டிங் அன்ட அட்வடைசிங் சிஸ்டமஸ்

இல 19/3 கொழும்புத்துறைவீதி,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு ஆதரவு தாரீர்;
A-3381


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாசகர்

(9ம் பக்கத் தொடர்ச்சி) கொண்ட பண்டிதர் வித்துவான் இரா. திருநாவுக்கரசு திருவாசகம் என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்தினர். (ரா)

## ஓராண்டு நினைவஞ்சலி



கந்தையா ஆறுமுகம்
(பூன்னாலை இ.போ.ச. ஊழியர்)

தோற்றம்: 01-02-1925
மறைவு: 02-01-1986

எங்கள் குடும்பத்தின் அன்புத் தீபமே! ஒளி விளக்காயும், வழிகாட்டியாகவும் திகழ்ந்து எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட தெய்வமே! விண்ணுலகு நீ சென்று ஓராண்டு ஆனாலும் எமது நெஞ்சை விட்டு அகலாது உம் நினைவு உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உமது பிரிவால் வாடும்
அன்பு மனைவி பிள்ளைகள்,
மருமக்கள் உற்றார்,
உறவினர்.
சிறுவிளான்,
இளவாலை.

(C 6475)

## கடைசி நேர வரி விளம்பரம்

**தவறிவிட்டது**

24-12-86 அன்று பேர்சுடன் 1 அடையாள அட்டையும் இரண்டு புகைப்படமும் சிறு தொகைப்பணமும் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்துக்கு தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும். P. யோகலிங்கம், முகமாலை, பளை.

(C 6543)

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
**லிடோ**
10-30, 2-30, 6-30

மோகன் - சுஹாஷினி மூர்த்தி நடித்த
**நெஞ்சத்தைக் கிள்ளாதே**
கலர் (புதிய பிரதி)

நத்தார் வெளியீடு
**ஆகாயத் தாமரைகள்**
(புதிய வெளியீடு)

புதிய வெளியீடு
**வெலிங்டன் திரையில்**
10-30, 2-30- 4 30, 6-30

ஆண்களை காதல் கேளிக்கைகளில் ஈடுபடுத்தி நினைத்ததை முடிப்பதில் அவள் வல்லவள். மயிர்கூச்செறியும் சண்டைகள் நிறைந்த

Samantha Fox
in
**TOO HOT TO HANDLE**
Action, Thrill, Sex
(Strictly Adults only)

---

அன்பர்கள், நண்பர்கள், மற்றும் எமது வாடிக்கையாள கட்கு எமது உளம் கனிந்த
நத்தார் வாழ்த்துக்கள்!

## எமது கிறிஸ்மஸ் வெளியீடுகள்

★ கமல் ★ ஸ்ரீதேவி ★ ராஜீவ் நடித்த
**ஹரே ராமா ஹரே கிருஷ்ணா**
(தரமான பிரதி)

★ சரத்பாபு ★ ராதா ★ ராஜீவ் நடித்த
**ஆண் மகன்**
(தரமான பிரதி)

## மிது வீடியோ மூவீஸ்,

பிரதான வீதி,
சித்தங்கேணி.

(A-3395)

---

## அறிவித்தல்

சாரதா புத்தகசாலை என்னும் பெயரில் இயங்கி வந்த ஸ்தாபனம் நிருபா ரேடர் NIRUPA TRADER என இயங்கிவருகின்றதென்பதை வாடிக்கையாளர்கள் மற்றும் ஸ்தாபனங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்:

## நிருபா ரேடர்

## NIRUPA TRADER

★ பாடசாலை புத்தகங்கள் உபகரணங்கள் மற்றும்
★ உள்நாட்டு, வெளிநாட்டு சஞ்சிகைகள்
★ கலண்டர், டயறி வகைகள்
★ வாழ்த்து மடல்கள் அனைத்தையும்

மலிவு விலையில்பெற இன்றே நாடுங்கள்:

## நிருபா ரேடர்

2, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

(A-3272)

---

## தேவை

# HOTEL GNANAMS

கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு தகுதி உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **HOTEL MANAGER** (Experience 3 Years)
2. **ACCOUNTS CLERK** (Experience 3 Years)

30-12-86க்கு முன் நேரில் நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

**HOTEL GNANAMS,**
C/o Gnanams Studio,
301, Clock Tower Rd.,
Jaffna.
T/P: 23067

(A-3392)

---

# EGERTON GROUP

Wishes All its Customers Friends Well Wishers and Specillay Rosarians of Mother Mary.

A Happy and
Peaceful Christmas
and Cheerful 1987

And we Express our Greatful Thanks to Mr S. Sluvirasa
Propritor Yarl Beach Inn In This greatday.

Joe Egerton and Staff.

(A 3388)

---

## நீண்டகால இடைவேளையின் பின்

எம்மிடம் எல்லாவிதமான வீட்டுத்தோட்ட உரங்கள் 2 கிலோ கிறாம் கொண்ட பைக்கற்றுகளாகவும், கிருமிநாசினிகளும் இப்பொழுது பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. பவர் அன் கொ. லிட்.
51, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

A BAUR and CO LTD.
(Jaffna Branch)
51, Amman Road,
Jaffna.

Phone:- 24318

(A-3389)

---

## எமது நத்தார் வெளியீடுகள்

1. ★ கமல் ★ ஸ்ரீதேவி
**ஹரே ராமா ஹரே கிருஷ்ணா** (Pyramid Master)
2. ★ சரத்பாபு ★ ரஞ்சனி
**ஆண் மகன்** (Pyramid Master)
3. ★ S S R ★ M. N. ராஜம்
**பெற்றமகனை விற்ற அன்னை** (Pyramid Master)
4. ★ அசோகன் ★ ஜெமினி
**வல்லவனுக்கு வல்லவன்** (Camera Copy)
5. ★ சரத்பாபு ★ காஞ்சனா
**ஸ்ரீ சிருஷ்டி சாயிபாபா** (Camera Copy)


எமது அன்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எங்கள் நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

## குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665.

(A-3270)

---




(A 3393)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

25 12 86 வியாழக்கிழமை

# "தண்ணீர் அருந்திய போத்தலை உடைத்து உடலில் ஏற்றினர்"

## மரணவிசாரணையில் இராணுவதரப்பு சாட்சி

மாவிட்டபுரம், புதன்.

"சம்பவதினம் அதிகாலை 3-15 மணியளவில் தாகமாக இருப்பதால் குடிக்கத் தண்ணீர் தருமாறு காலமானவர் கேட்டார். போத்தலில் அவருக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டது. தண்ணீரை அருந்தியதும் அவர் அப்போத்தலை உடைத்து தமது உடலில் ஏற்றி காயங்களை உண்டுபண்ணினர். இதனால் இவர் மரணத்தைத் தழுவ நேரிட்டது"

காங்கேசன்துறை ஹாபர் வியூ ஹோட்டல் இராணுவ முகாமில் மரணமான காங்கேசன்துறையைச் சேர்ந்த சஞ்சீவ சிவலிங்கம் (39 வயது) என்பவரின் மரண விசாரணையின் போது இராணுவ தரப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இம்மரணம் குறித்த மரண விசாரணையை ஹோட்டல் இராணுவ முகாமில் வைத்து மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஜி. வி பாலசிங்கம் மேற்கொண்டார்.

இராணுவ தரப்பில் சம்பவத்தின் போது கடமையிலிருந்த ஏ எஸ் பிரேமச்சந்திர. கே ரணசிங்கா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

காலஞ்சென்றவர் வெளியில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக முகாமில் சரணடைந்து அங்கு பாதுகாப்புக்கைதியாக வைக்கப்பட்டிருந்ததாகவும் அவர்கள் சாட்சியத்தில் குறிப்பிட்டிருந்தனர்.

பதில் நீதிபதி பிரேதபரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தனியார் தொலைக்காட்சியாளர் கூட்டமொன்று இம்மாதம் 27-ம் திகதி சனிக்கிழமை யாழ் வின்சர் தியேட்டர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கான ஒழுங்குகளை ஒலி ஒளி ஒன்றியக் கட்டுப்பாட்டுக் குழுவினர் செய்துவருகின்றனர். (ஒ)

## மரண அறிவித்தல்

### அருணி வேதநாயகம்

அருணி வேதநாயகம் காலமாகிவிட்டார்: இவர் பாக்கியத்தின் அன்புக்கணவரும், அன்புமணி, புஷ்பருணி சூசைதாஸ் (விவசாயத்திணைக்களம், அனுராதபுரம்), கிளி, கிறிஸ்ரி (திருகோணமலை), அலரன் (அவுஸ்திரேலியா), சுசீலா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரனிஸ்லோஸ் (விவசாய ஆராய்ச்சி நிலையம் கிளிநொச்சி), ஜீவரூபா (டோகா), மரியதாஸ், ஜெசிந்தா கலா, ஜெனித்தா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனருமாவார் அன்னாரின் பூதவுடல் இன்று 25-12 86 மாலை 4 மணியளவில் ஆச்கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்: மகன் சூசைதாஸ்

26, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (C 6542)

### காசிலிங்கம் அப்பாக்குட்டி

வடகோவை திரு காசிலிங்கம் அப்பாக்குட்டி டாக்டர் Lams (Cal) 24-12-1986 இல் சிவபதமடைந்தார். அன்னார் சரசுவதியின் அன்புக்கணவரும், திரு காசிலிங்கம் (திருநெல்வேலி), சந்தசாமி (ஜேர்மனி), திருமதி பாலகிருஷ்ணர் மல்லிகை புஸ்பம் (சிங்கப்பூர்) திருமதி முருகேசவன் குணநாயகி [திருநெல்வேலி] ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் (இன்று) 25 12-86ல் திருநெல்வேலியில் காலை 10 மணிக்கு நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்

தகவல்: அ. காசிலிங்கம்

28/12, மணற்தறை வீதி,
திருநெல்வேலி. C 6533

### திரு. அ. சங்கரப்பிள்ளை (சண்டிலிப்பாய்)

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. அ. சங்கரப்பிள்ளை ஒய்வுபெற்ற பிரதம லிகிதர், பொலிஸ் திணைக்களம்) காலமானார். இவர் காலஞ்சென்ற திரு திருமதி அப்பாக்குட்டி ஆகியோரின் மகனும், திருமதி அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், செல்வவிநாயகம், தெய்வநாயகி சர்வேஸ்வரன், சர்வேஸ்வரி, தேவாம்பிகை, விக்னேஸ்வரி, தயாபரன், விமலாதேவி, காலஞ்சென்ற யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், சீதாலட்சுமி இராஜேஸ்வரி, சிறீகாந்தன் தங்கவேல், நித்தியானந்தன், ஜெயசிங்கம், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் ஆகியோரின் மாமனாரும் பொன்னம்பலம், சிவஞானம், முருகையா, காலஞ்சென்ற அழகேசு ஞானேஸ்வரி, அனனப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரரும், திருவருட்செல்வி சிறீசங்கர், சிவானந்தி, கிருபா, கோகிலா, பாலகுமாரன் நிலானி நிரஞ்சன், நிலோஷனி, நிவேதினி, ரஜினி, விஜேசசங்கர், தாரணி, கோபிசங்கர், ராமசங்கர், சுதர்ஷினி, தினேஷ்சங்கர், சர்மினி ஆகியோரின் அன்புப்பாட்டனுமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் (24-12-86 புதன்கிழமை மாலை சண்டிலிப்பாயிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது

(C 6424)

### கந்தையா நாகேஸ்வரன் B. A நயினாதீவு

(நாகேஸ் மாஸ்டர்)

நயினாதீவு திரு திருமதி கந்தையா சின்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் நாகேஸ்வரன் (ஒய்வுபெற்ற ஆசிரியர் பரந்தன் மகாவித்தியாலயம்) காலமாகிவிட்டார் இவர் சாரதாவின் அன்புக்கணவரும், டாக்டர் மாலதி (யாழ் அரசினர் வைத்தியசாலை), சித்திரா (யாழ் தொழில் நுட்பக்கல்லூரி), சத்தியா (மாணவி-யாழ் மருத்துவபீடம்), கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் சொக்கலிங்கம், கனகம்மா, நாகம்மா, காலஞ்சென்ற சரவணமுத்து, கனகரெத்தினம் (முத்தையா மாஸ்டர்), செல்லையா, தெய்வானைப்பிள்ளை, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு திருமதி சுப்பிரமணியம் சீதேவிப்பிள்ளை (முத்தாச்சி ஆசிரியர்) தம்பதிகளின் அன்பு மருமகருமாவர் ஈமக்கிரியைகள் (இன்று) வியாழக்கிழமை 25-12-86 39/5, ராசாவின் தோட்டவீதி யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்று மாலை 4 00 மணிக்கு தகனத்திற்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

பிந்திய செய்தி: இவரின் கனிஷ்டபுத்திரி கவிதாவும் காலமாகிவிட்டார்.

C 6538 தகவல்: M. C. இரத்தினகோபால்

## அண்ணன் கண்டித்ததால் தங்கை தற்கொலை

மாவிட்டபுரம், புதன்.

பக்கத்து வீட்டில் தொலைக்காட்சி பார்க்கச்சென்ற தங்கையை அண்ணன் கண்டித்ததால் அவர் நச்சுக்காய் உண்டு தற்கொலை செய்துகொண்டார்.

உடுவிலைச் சேர்ந்த வீரசிங்கம் கலாமலர் என்னும் 15-வயது யுவதியே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு நா தம்பிராசா விசாரணை நடத்திய சமயம், காலஞ்சென்றவர் பக்கத்து வீட்டில் தொலைக்காட்சி பார்க்கச்செல்வதை அண்ணன் கண்டித்த போதும் அவர் கேளாமல் அங்கு செல்லவே அண்ணன் அங்கு போய் அவரைக் கூட்டிவந்து கண்டித்து அடித்தார் இதனால் மனமுடைந்து அவர் தற்கொலை செய்தார்." என சாட்சியங்கள் மூலம் தெரிய வந்தது.

விசாரணை முடிவில் தற்கொலை என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

உடுவில் கிராம சேவையாளர் எஸ் ஆறுமுகம் சாட்சிகளை ஆஜர் செய்தார். [எ]

## 'இருவர் வீரமரணம்'

யாழ்ப்பாணம், வியா:

மட்டக்களப்பு குருமன்வெளியில் சென்று கொண்டிருந்த டெலோ இயக்கத்தைச் சேர்ந்த இருவர் மீது கொமாண்டோ படைகள் தப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் இதனையடுத்து அவர்களிருவரும் சயனைட் அருந்தி வீரமரணமடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்

இரண்டாம் லெப்ரினன் கிருஷ்ணவும் கோபுமவே இவ்வாறு மரணத்தை தழுவியவர்கள் என்றும் இவர்களுக்கு தமதுவீரவணக்கத்தை செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர். (கி)

### புதிய----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசுடன் விரிவாக ஆலோசனை நடத்திவிட்டு இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் திரு பேனட் திலகரத்தின நேற்று முன்தினமிரவு புதுடில்லி சென்றார்.

## கிரிக்கெட்:
## இலங்கையிடம் இந்தியா தோல்வி

புதுடில்லி டிச 25

இந்திய இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கிடையில் கான்பூரில் நன்று நடைபெற்ற சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில இலங்கை அணி 116 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 46 ஓவர்களில் எட்டு விக்கெட் இழப்பிற்கு 196 ஓட்டங்களைப் பெற்றது. இதனை அடுத்து ஆடிய இந்திய அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 80 ஓட்டங்களைப்பெற்றது

ஆட்டத்தின் சிறந்த வீரராக அர்சுன ரணதுங்க தெரிவு செய்யப்பட்டார். (சி)

### ஆனையிறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரண பரீட்சை வினாத்தாள்கள் திருத்துவதற்காக கொழும்பு செல்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [சி]

### அடுத்த மாதம்

[4-ம பக்கத் தொடர்ச்சி]

கு மாஜி ஜனாதிபதி மார்கோஸிடம் தயவு செய்து புகலிடம் தேடுங்கள் என்று ஆலோசனை கூறுகின்றோம்

### ஐரோப்பிய தலைமைக்கு இன்று ஆள் ஆர்?

அமெரிக்க ஜனாதிபதியின் சர்வதேச சாயம் சுழன்றுவருகிறது. மீண்டும் அமெரிக்காவில் அவர் நம்பம் புனரமைக்கப்பட்டாலும் அடுத்த இரு வருடங்களிலும் அது சுகம் பேசாது. திறமை குன்றிய தலைவர் என்ற பெருங்குறை வசைமொழியாகப் பரவி வருகிறதுஎனவே உலக விவகாரங்களில் ஐரோப்பாவின் குரல் ஒலிக்கவேண்டும் அதற்கு யார் தகுதியுடையவர்? தாட்சர், கோல் மித்தாராப் கிறக்ஸி எல்லோரும் தத்தம் நாடுகளைவிட ஆகிய ஐரோப்பாவிற்கும் வாதாடவல்ல தலைவர்கள் அல்ல.

## இ. தொ. கா. கோரிக்கை

கொழும்பு, புதன்

தோட்டத் தொழிலாளர்கள் வசிக்கின்ற 'லயன்' அறைகளும் அதன் சுற்றுபுற பகுதிகளும் அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் அவர்களுக்குச் சொந்தமாக்கப்படவேண்டும் என்று இ. தொ. கா. கோரிக்கை விடுத்துள்ளது.

987ம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அதன் குறிக்கோளாக இதனை கொண்டுள்ளது என்று அதன் தலைவரும், கிராமிய தொழிற்றுறை அமைச்சருமான திரு எஸ் தொண்டமான் கடந்த வாரம் டிக்கோயாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் அறிவித்துளார். [சி]

### துன்பத்திலிருந்து---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேதனை துன்பங்கள் மத்தியில் பிறந்த யேசு மக்களுக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாக இருந்தது போல தமது துன்பங்களும் வேதனைகளும் நமக்குக் கலக்கத்தைக் கொடுத்தாலும் நாம் அவற்றில் இருந்து விடுபட்டு இறை அமைதியையும் சமாதானத்தையும் பெற குழந்தை யேசு வழிகாட்டுவார் என்றார்.

''உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார்'' என்று தேவகுமாரனின் பிறப்பு எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று கூறிய தமிழ்ச் சமுதாயம் பல துன்பங்களையும் அனுபவித்து வரும் இந்நாட்களில ஆண்டவருடைய சமாதானத்தை எம்மக்கள் மத்தியில் பொழிய வேண்டுமென குழந்தை யேசுவை இறைஞ்சுவோமாக திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரும் இதே செய்தியையே நம் மக்களுக்கு இன்று தருகின்றார் என்றும் கூறினார். (வா)

## அகதிகளுக்கு 8 1/2கோடி உதவி

சென்னை, டிச 24

தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகளுக்கு கடந்த மூன்றாண்டுகளில் எட்டரைக் கோடி ரூபா வரை உதவி செய்யப்பட்டிருப்பதாக தமிழ்நாடு மாநில மறுவாழ்வு துறை இயக்குனர் திரு பழனிச்சாமி தெரிவித்தார்

வராட்சி ஒன்றியப் பகுதி இலங்கை அகதிகளுக்கு இலவசமாக புதிய குடியிருப்புகள் அமைக்கவும் இருபது லட்சம் ரூபா பெறுமதியான சமையல் பாத்திரங்கள் மற்றும் துணி வகைகள் வழங்க அரசு ஆலோசித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### ஹெலியின்---

1ம் பக்கத் தொடர்ச்சி

னால் இப் பகுதி மக்கள் பரபரப்படைந்தனர்.

செவ்வாய் நள்ளிரவு ஒரு தடவை வல்வை இராணுவ முகாம் பகுதியைச் சுற்றி வட்டமிட்ட ஹெலி கடல் மார்க்கமாக வந்து தரையிறங்கியது.

இச் சம்பவத்தினால் கடலில் நின்ற சிறு தொழில் கடற்றொழிலாளர்கள் பீதியுற்று வலைகளை அப்படியே கடலில் விட்டுவிட்டு வந்தவரும் வலைகளை அவசர அவசரமாக இழுத்துக்கொண்டு வந்தவருமாகக் கடற்றொழிலாளர்கள் கரை வந்து சேர்ந்தனர்.

இரவு சுமார் 10 மணியளவில் இராணுவ முகாம் எல்லைக்குள் பாரிய வெடிச் சத்தம் கேட்டதாகவும். முகாமில் ஏற்பட்ட தவறுதலான நிலக் கண்ணி வெடிப்பினால் இராணுவத்தினர் படுகாயமடைந்திருக்கலாம் எனவும் பேசப்படுகின்றது.

அதனாலேயே நடுநிசியில் இறங்கிய ஹெலி பத்து நிமிடத்துக்குள் மேலெழுந்து சென்றது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/84 Eelanadu P.O. Box 49 Telegrams: Eelanadu
Telephone: 22389—24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org